# 1. பொருளாதாரப் பிரச்சனைகளும் கொள்கைகளும்—1963

## முன்னுரை

தற்காலிகமான மதிப்பீடுகளின்படி 1963ம் ஆண்டில் இலங்கையின் மொத்தத் தேசிய உற்பத்தி, நடைமுறைவிலைகளின்படி, 4.8 சதவீதத்தால் அதிகரித்தது. ஆயினும் உண்மை நியதியின்படி, அதாவது நிலையான விலைகளின்படி, இவ்வருடத்திற்கான மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு ஆக 1.8 சதவீதமாகும். சனத்தொகை அதிகரிப்பிற்கு இடம் விட்டு நோக்குமிடத்து தனியாளுக்கான உண்மை உற்பத்தி 1963ம் ஆண்டில் 0.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. 1963ம் ஆண்டில் உண்மை நியதியின் படியான மொத்தத் தேசிய உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு விகிதம் அதற்கு முந்தைய வருடத்திலும் குறைவாக இருந்தது. இது ஏற்றுமதித் துறையின் உற்பத்தி குறைந்தமையினாலும், உள்நாட்டுத் துறையின் உற்பத்தி ஒரு சிறிய விகிதாச்சாரமான அளவால் அதிகரித்தமையினாலும் ஏற்பட்டது. ஆயினும், கைத்தொழில் உற்பத்தி குறிப்பிடத்தக்க அளவால் 1963ம் ஆண்டிற் தொடர்ந்தும் அதிகரிக்கலாயிற்று. இவ்வாண்டில் உள்நாட்டு அரிசி உற்பத்தியும் அதிகரித்ததாயினும், 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 11.3 சத வீதமான அதிகரிப்பிற்கு எதிராக 1963ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு 2.3 சதவீதமாக உள்ளது.

1963ம் ஆண்டில் இலங்கையின் பொருளாதாரம் ஆதரவற்ற தன்மையுடைய பல விடயங்களை எதிர்கொள்ள வேண்டியிருந்தது. கடந்த வருடங்களின் நாணய விரிவினாலும், அதன் பிரதிபலனாக வெளிநாட்டுச்சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியின் பயனாகவும், இலங்கையின் சென்மதி நிலுவை நிலையிற் தோன்றிய அமுக்கங்களை விடுவிப்பதற்காக இறக்குமதிகளின் மீதுள்ள பரந்த கட்டுப்பாடுகளைத் தொடர்ந்தும் வைத்திருக்கவேண்டியிருந்தது. 1963ம் ஆண்டிற் பலவகைப்பட்ட இறக்குமதிப் பொருட்களில் ஒப்பியல்பான தட்டுப்பாடுகளும் விலையேற்றங்களும் தோன்றின என்பதற்கான அறிகுறிகள் உள. அன்றியும், இவ் ஆண்டில் இறக்குமதி விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் பயனாக இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் குன்றியமை இந்நிலைமையை மோசமாக்கிற்று. குறிப்பாக இவ் ஆண்டின் இறுதிப்பகுதியில் அரிசி, கோதுமைமா, முக்கியமாகச் சீனி ஆகியனவற்றின் வெளிநாட்டு விலைகளில் ஒரு தீட்சணமான அதிகரிப்பு ஏற்பட்டது. இப் பொருட்கள் அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்டு விற்கப்படுவனவையாகும். ஆனால் இவ்விலை அதிகரிப்புக்கள் உள்நாட்டு நுகர்வோர்மீது சுமத்தப்படாதமையாலும், நுகர்வோரின் தேவைகளை நிரப்ப வேண்டியமையாலும், இந் நிலைமைகள், இலங்கையின் சென்மதி நிலுவையின் மீதும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின் மீதும் மேலும் கூடுதலான அமுக்கங்களை விளைவித்தன.

1962-63ம் நிதியாண்டில், அரசாங்கத்தின் வரவு செலவுத்திட்டத்தினுள்ள மொத்தப் பணக்குறையும், விரிவு விளைவிக்கத்தக்க மூலாதாரங்களிலிருந்து நிதியீட்டப்பட்ட அளவும் குறைவுற்றன. 1961-62ம் ஆண்டில் ரூபா 4561 இலட்சமாக இருந்த மொத்தப் பணக்குறை 1962-63ம் ஆண்டில் ரூபா 3917 இலட்சத்திற்கும், விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டம் ரூபா 1904 இலட்சத்திலிருந்து ரூபா 1620 இலட்சத்திற்கும் குறைந்தன. 1962-63ம் ஆண்டு மொத்தப் பணக்குறையில் ஏற்பட்ட வீழ்ச்சி, பெரும்பாலும் அரசாங்க முகவர் நிலையங்களின் மூலதனச் செலவீடுகளுக்காக வழங்கப்பட்ட

கடன்கள் குறைவுற்றமையினுல் ஏற்பட்டதாகும். இவ்வருடத்தில் வங்கிகளல்லாத மூலாதாரங்களிலிருந்து அரசாங்கக் கடன்களுக்கு உதவப்பட்ட தொகையும், அந்நிய உதவிகளிலிருந்து கிடைத்த வருவாய்களும், குறிப்பிடும்படியாக அதிகரித்தன. நடைமுறை நிதிவருடமான 1963-64ம் ஆண்டில், விரிவுவிளைவிக்கத்தக்க மூலாதாரங்களிலிருந்து நீதியீட்டப்படும் தொகையை ரூபா 545 இலட்சத்திற்குள் வரையறுக்க இவ்வாண்டுக்குரிய வரவு செலவுத்திட்டம் முனைந்துள்ளது. ஆயினும் இக்குறிக்கோள், 1963ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் உணவுப்பொருட்களின் வெளிநாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பினுல் பாதிக்கப்படத்தக்கது. விலை அதிகரிப்பின் பயனுல் உணவுப் பொருட்களின் இறக்குமதிச் செலவீடு ரூபா 1670 இலட்சத்தால் அதிகரிக்குமென மதிப்பிடப்பட்டுள்ளது.

1963ம் ஆண்டிற் தனிப்பட்டோர் துறைக்கும், அரசாங்க கூட்டுத்தாபனங்களுக்கும், முகவர் நிலையங்களுக்கும், வர்த்தக வங்கிகள் வழங்கிய மொத்தக் கொடுகடனில் ஒரு தீட்சணமான அதிகரிப்புக் காணப்பட்டது. இது பெரும்பாலும் இலங்கையர்களுக்குச் சொந்தமான வங்கிகள் வழங்கிய அதிகரித்த கொடுகடன்களினுல் ஏற்பட்டதாகும். கடந்த ஆண்டுகளில் அரசாங்க நிதியினதும் தனிப்பட்டோர்துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்களினதும் விரிவு விளைவுகளினுற் பண நிரம்பலில் ஏற்பட்ட விரிவு, வங்கிகளின் நிகர வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியினுற் பெருமளவு ஈடுசெய்யப்பட்டது. ஆனுல், 1963ம் ஆண்டில் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் நிலவியதெனவே, மேற்கூறப்பட்ட காரணியின் சுருக்கத்தன்மைகள் குறைவுற்றன. எனவே, கடந்த வருடத்தில் 4.2 சதவீதத்தால் அதிகரித்த மொத்தப் பணநிரம்பல் இவ்வருடத்தில் 12.3 சதவீதத்தால் அதிகரித்தது. இவ் அதிகரிப்பு, தவணைவைப்புக்களும் சேமிப்புவைப்புக்களும் குறிப்பிடத்தக்க அளவால் அதிகரித்த போதிலும் ஏற்படலாயிற்று.

அண்மை வருடங்களில் நிதித்துறையிற் தொடர்ச்சியாக ஏற்பட்ட விரிவூட்டும் அமுக்கங்கள் கட்டுப்படுத்தப்படவேண்டுமென்ற அவசியத்தை இவ் அறிக்கையின் பிற்பகுதிகளில் விரிவாகக்கூறப்பட்டுள்ள 1963ம் ஆண்டுச் சம்பவங்கள் மேலும் வலியுறுத்துகின்றன. அவ்வித கட்டுப்பாடுகள் இல்லாதவிடத்து, விலைவாசிகளின்மீதும் நிரம்பல்களின்மீதும் தோன்றிவரும் அமுக்கங்கள் வருங்காலத்திற் செறிந்த பலம்பெற்றுவிடக்கூடும். இவ்வாறு ஏற்படின், உள்நாட்டு உற்பத்தித்துறையில் உள்ள ஆக்கச்செலவுகள் மட்டுமன்றி ஏற்றுமதித்துறையில் உள்ள ஆக்கச் செலவுகளும் பாதகமாகத் தாக்கப்பட்டு, நாட்டின் சென்மதி நிலுவை நிலையிலும், வெளிநாட்டுச் சொத்துக்களிலும், அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலும் கூட, தற்போது காணப்படும் நெருக்கடிகளை அவை மேலும் கொடூரமாக்கிவிடும்.

## (I) 1963ம் ஆண்டின் பொருளாதார வளர்ச்சி

முன்னர் கூறப்பட்டவாறு, பணநியதியின்படி, அதாவது நடைமுறை விலைகளின்படி, 1963ம் ஆண்டின் மொத்தத் தேசிய உற்பத்தி 4.8 சதவீதத்தால் அதிகரித்ததென மதிப்பிடப்பட்டுள்ளது. சனத்தொகை, ஒரு மதிப்பிடப்பட்ட 2.6 சதவீதத்தால் அதிகரித்தமைக்கு இடம்விட்டு நோக்குகையில், தனியாளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தியின் அதிகரிப்பு 2.1 சதவீதமாக உள்ளது. தனியாளுக்கான மொத்தத் தேசிய உற்பத்தியினதும், முழுமையான மொத்தத் தேசிய உற்பத்தியினதும் அதிகரிப்பு விகிதங்கள், 1962ம் ஆண்டிற் காணப்பட்ட அதிகரிப்பு விகிதங்களிலும் பார்க்கச் சிறிது உயர்ந்தனவாகும். 1962ம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 4.5 சத

வீதத்தாலும், தனியாளுக்கான உற்பத்தி 1.8 சதவீதத்தாலும் அதிகரித்தன. அவ் ஆண்டு சனத்தொகையில் ஏற்பட்ட அதிகரிப்பு 2.7 சதவீதமாக உள்ளது.

உண்மை நியதியின்படி, அதாவது நிலையான விலைகளின்படி, 1963ம் ஆண்டில் மொத்தத் தேசிய உற்பத்தி 1.8 சதவீதத்தால் அதிகரித்தது. இது 1962ம் ஆண்டில் ஏற்பட்ட 3.7 சதவீதம் கொண்ட அதிகரிப்பிற்கு எதிராக உள்ளது. 1963ம் ஆண்டில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பு, சனத்தொகை அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவானது என்பது குறிப்பிடத்தக்கது. தனியாளுக்கான நியதியின்படி, உண்மை உற்பத்தி 1963ம் ஆண்டில் 0.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது என்பது முந்தைய வருடத்தில் ஏற்பட்ட 1.0 சதவீதமான அதிகரிப்புடனும், 1960ம் ஆண்டு முதல் 1962ம் ஆண்டுவரை ஏற்பட்ட வருடாந்தச் சராசரி அதிகரிப்பு வீதமான 0.8 சதவீதத்துடனும் ஒப்பிடற்குரியது.

1963ம் ஆண்டில் ஏற்றுமதித்துறையின் உற்பத்தி, அண்மை வருடங்களில் ஏற்படாதவாறு, உண்மை நியதியின்படி ஒரு வீழ்ச்சியைக் காட்டிற்று. எனவே, மொத்தத் தேசிய உண்மை உற்பத்தியில் ஏற்பட்ட அதிகரிப்பு, உள்நாட்டுத்துறையின் விரிவினுல் ஏற்பட்டதெனலாம். ஆயினும், 1963ம் ஆண்டு உள்நாட்டுத்துறையின் உற்பத்தியில் ஏற்பட்ட 3.1 சதவீதமான அதிகரிப்பு முந்தைய வருடத்திற்குரிய 4.2 சதவீதமான அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவானதாகும். கைத்தொழில் உற்பத்தி, மீன் உற்பத்தி, அரசாங்கத் தொழிற் தலங்களின் மூலதன அபிவிருத்தி, ஆகியன, தொடர்ந்தும் அதிகரித்தன. 1962ம் ஆண்டு குறிப்பிடத்தக்க அளவால் அதிகரித்த நெல் உற்பத்தி, 1963ம் ஆண்டில் மேலும் 11 இலட்சம் புசல்களால் அதிகரித்து 492 இலட்சம் புசல்களான மொத்த விளைவைத் தந்தது. எனினும், 1963ம் ஆண்டில் 2.3 சதவீதமாக உள்ள இவ் அதிகரிப்பு விகிதம், 1959ம் ஆண்டு முதல் 1962ம் ஆண்டுவரை உள்ள வருடாந்தச் சராசரி அதிகரிப்பு விகிதமான 9.8 சதவீதத்திலும் பார்க்கக் குறைவானதாகும்.

நடைமுறைச் சந்தைவிலைகளின்படியுள்ள மொத்தத் தேசிய செலவு, மொத்தத் தேசிய உற்பத்தியிலும் பார்க்கத் தொடர்ந்தும் மேலதிகமாகவே இருந்தது. இதன்விளைவாக இலங்கையின் பொருளாதாரத்திற் கடந்த சில ஆண்டுகளில் ஒரு மீண்டுவரும் அம்சமாகக் காணப்பட்ட வெளிநாட்டு முதலீட்டங்களின் சிதைவு 1963ம் ஆண்டிலும் தொடர்ந்து ஏற்பட்டது. ஆயினும், மிக அண்மையிலுள்ள வருடங்களில் ஏற்பட்ட இம் மூலதனச் சிதைவின் அளவு, 1961ம் ஆண்டிற்கு முற்பட்ட வருடங்களில் ஏற்பட்ட அளவிலும் பார்க்கக் குறைவானதாகும்.

பணநியதியின்படி, அல்லது நடைமுறைவிலைகளின்படி, நுகர்வோரின் செலவீடுகள் 1963ம் ஆண்டில் 5.5 சதவீதத்தால் அதிகரித்தன. ஆனல் மறுபுறத்தில், நடைமுறைவிலைகளின்படியான மொத்த மூலதன ஆக்கம் 3.8 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. இவ்வீழ்ச்சி, நிலையான மூலதன ஆக்கம் வீழ்ச்சியுற்றமையால் ஏற்பட்டது. சந்தை விலைகளின்படி மொத்த உள்நாட்டு நிலையான மூலதன ஆக்கத்தை மொத்தத் தேசிய உற்பத்தியின் சதவீதமாக நோக்குகையில், அது 1962ம் ஆண்டிற்குரிய 15.0 சதவீதத்திலிருந்து, 1963ம் ஆண்டு 13.7 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றதெனத் தெரிகிறது. நிலையான மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி முக்கியமாகத் தனிப்பட்டோர்துறையிலும், அரசாங்கக் கூட்டுத்தாபனங்களிலும் ஏற்பட்டது.

நிலையான மூலதன ஆக்கம் அரசாங்கத்துறையின் ஏனைய பகுதிகளிலும் வீழ்ச்சியடைந்திருக்கையில், அரசாங்க தொழிற்தலங்களின் நிலையான மூலதன ஆக்கம் ஒரு குறிப்பிடத்தக்க அதிகரிப்பைக் காட்டிற்று.

கைத்தொழில் சம்பந்தமான தொழிற்பாடுகளை அறிவதற்கு, ஏனைய மூலங்களிலிருந்து கிடைத்த விபரங்களோடு ஊழியர் சேமநிதியினுற் தரப் பட்ட விபரங்களையும் உபயோகித்து இலங்கை மகா வங்கி நடாத்திய அள வீட்டின் விரிவுரைகள் இவ் அறிக்கையின் பின்னுள்ள ஒருபகுதியிற் தரப் பட்டுள்ளன. அண்மை வருடங்களிற் கைத்தொழிற் தொழிற்பாடுகளிற் குறிப்பிடும்படியான அதிகரிப்பு ஏற்பட்டது என்பதை இந்த அளவீடு உறுதிப் படுத்துகின்றது. இவ் அளவீட்டின்கீழ் அமைந்த கைத்தொழில்களின் மொத்த உற்பத்தி, 1962ம் ஆண்டில் 16.9 சதவீதத்தாலும், 1963ம் ஆண்டில் 11.3 சதவீதத்தாலும் அதிகரித்தது. இக்கைத்தொழில்களின் மொத்த உற் பத்தியின் பெறுமானம் 1963ம் ஆண்டில் ரூபா 447 இலட்சத்தால் உயர் வுற்றது. மொத்த உற்பத்தியின் அதிகரிப்பில் ஒரு குறிப்பிடும்படியான பகுதி மூன்றுதொழில்களின் உற்பத்தி அதிகரித்தமையினுல் ஏற்பட்டது; அவையாவன, ஆடைகள், விஸ்கோத்துப் பதார்த்தங்கள், உலோகப் பொருட்கள் ஆகியனவாகும். இந்த அளவீடு ஒவ்வொரு தொழில்களிலும் உள்ள தொழில் நிலையங்களை அவற்றின் உற்பத்தி அளவுகளின்படியும், மொத்தக் கூலிச் செலவுகளின்படியும் பாகுபடுத்திக் காட்டுகிறது. இதிற் கிடைத்த விபரங்கள் இலங்கையிற் தோன்றிவரும் கைத்தொழில்களின் அமைப்பு முறையை முதல் முறையாகத் துலக்கிக் காட்டுகின்றன.

## (2) பொதுவான நாணய விருத்திகளும் நிதிவிருத்திகளும்

1963ம் ஆண்டில் உள்நாட்டுப் பொருளாதாரத்திற் காணப்பட்ட இரண்டு முக்கிய அம்சங்களாவன, பொதுவான விலைமட்டங்களில் ஏற்பட்ட உயர்ச்சி யும், பலதரப்பட்ட இறக்குமதிப் பொருட்களின் நிரம்பலில் ஏற்பட்ட தட்டுப்பாடுகளுமாகும். மொத்த அல்லது சில்லறை விலைகள் சம்பந்தமாகத் தகுந்த குறிகாட்டிகள் இல்லாதவிடத்து, விலைகள் எவ்வளவு தூரம் அதி கரித்தன என்பதைச் சரியானபடி அளவிடுதல் இயலாது. ஆயினும் குறுகிய பரப்புடையதாகவும், மான்னியம் பெறும் பொருட்களுக்கு ஒப்பியல்பிற் கூடிய முக்கியத்துவம் அளித்துக் கணிக்கப்பட்டதுமான கொழும்பு நுகர் வோர் விலைக்குறிகாட்டி இவ்வருடத்தில் 2.4 சதவீதத்தால் அதிகரித்தது. ஆனுல், இக்குறிகாட்டிக்கு அப்பாற்பட்ட பல பொருட்களின் விலைகள் கூர்மையாக அதிகரித்தன என்பதற்கான அறிகுறிகள் உள. இதேபோல, இறக்குமதிப் பொருட்களின் மொத்த நிரம்பலை அளவிடுவதற்குத் திட்ட வட்டமான புள்ளிவிபரங்கள் இல்லை. இவ்வருடத்தில் மொத்த இறக்குமதி களின் அளவுக்குறிகாட்டி 14.1 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது. ஆனுல் இவ் விடயத்திலும், கையிருப்புகள் சம்பந்தமான புள்ளிவிபரங்கள் இல்லாதமை யாலும், இக்குறிகாட்டியின் குறுகிய தன்மையாலும், இறக்குமதிப் பொருட் களின் மொத்த நிரம்பலில் ஏற்பட்ட உண்மையான மாற்றத்தைச் சரியான படி மதிப்பிடுதல் இயலாமல் இருக்கின்றது.

அரசாங்கத்தினுல் விநியோகிக்கப்படும் அத்தியாவசியமான உணவுப் பொருட்களான அரிசி, சீனி, கோதுமைமா ஆகியனவற்றின் சில்லறை விலை கள், பொதுவான விலைவாசிகளின் அதிகரிப்பினுற் பாதிக்கப்படவில்லை. இப் பொருட்களின் இறக்குமதி விலைகளில் அதிகரிப்பு ஏற்பட்டதாயினும், அவற் றின் சில்லறை விலைகள் முன்புபோல் வைத்திருக்கப்பட்டதுமன்றிக் கோதுமை

மாவின்விலை மிதமாகக் குறைக்கவும்பட்டது. இதே சமயத்தில், அத்தியாவசியமான பொருட்களின் நிரம்பல்களைக் கூடுமானவரை உயர்ந்த அளவில் நிலைநாட்டுவதே அரசாங்கத்தின் இறக்குமதிக் கொள்கையாகவும், விநியோகக் கொள்கையாகவும் முனையப்பட்டது. அன்றியும், இறக்குமதிப் பொருட்களுக்குப் பதிலான பொருட்கள் உள்நாட்டிற் தயாரிக்கப்பட்டமை இறக்குமதி நிரம்பல்களில் ஏற்பட்ட வீழ்ச்சியை ஓரளவிற்கு ஈடுசெய்தன. ஆனல் இக்காரணிகள், உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது விலை அதிகரிப்புகளின் பயனுகவும், தட்டுப்பாடுகளின் பயனுகவும் தோன்றிய பிரதிபலன்களைத் தணிக்க உதவினவேயன்றி, அவற்றை முற்ருக நீக்க உதவவில்லை.

இத்தன்மைகளுக்கு அடிகோலியாக இரண்டு காரணிகள் இருந்தன. முதலாவதாகக் கடந்த சில ஆண்டுகளிற் தொடர்ச்சியாக ஏற்பட்ட பெரிய அளவுடைய நாணயவிரிவு காணப்பட்டது. இரண்டாவதாக இலங்கையின் ஏற்றுமதிகளின் கொள்வனவு வலு குறைவடையக்கூடியதாக வர்த்தக மாற்று விகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டது. இவ் இரண்டு காரணிகளும் 1963ம் ஆண்டு இலங்கைக்கு ஏற்பட்ட இடர்களின் சந்தர்ப்பத்தில் முக்கியமானவையாகும்.

அரசாங்க வரவு செலவுத்திட்டங்களிலுள்ள மிதமிஞ்சிய பணக்குறைகளுக்கு நிதியீட்டிய முறையின் பயனுல் எழுந்த தொடர்ச்சியான நாணயவிரிவுகளின் பிரதிபலன்கள், மகாவங்கியின் முந்தைய வருடாந்த அறிக்கைகளிற் தெளிவாகக் கூறப்பட்டுள்ளன. வெளிநாட்டுச் சொத்துக்கள் ஏராளமாக இருக்கும்வரை நாணயவிரிவினுல் எழும் அதிகரித்த கேள்விகளுக்கு இணையாக இறக்குமதிப் பொருட்களின் நிரம்பலை அதிகரித்துக்கொள்ள முடியும் என்பதனுல், அவ்வகையான நாணயவிரிவு பொதுவான விலைமட்டங்களின்மீது பாரதூரமான பிரதிபலன்களை உண்டுபண்ணுது என்பதும் முந்தைய அறிக்கைகளிற் கூறப்பட்டது. ஆயினும் இறக்குமதிகளை அதிகரித்தல் சென்மதிநிலுவை நிலையின் மீது அமுக்கங்களை உண்டுபண்ணுவதோடு வெளிநாட்டுச் சொத்துக்களையும் குறையச் செய்துவிடும். இவ்வாறு வெளிநாட்டுச் சொத்துக்கள் உபயோகிக்கப்பட்டபின், வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரித்தல் தவிர்க்கப்படின், இறக்குமதிகளைக் குறைப்பதேயல்லாமல் வேறு வழிகள் இல்லை. குறைவுற்ற இறக்குமதி நிரம்பல், உயர்ந்தமட்டமான நாணயக்கேள்விகள் உள்ள சந்தர்ப்பத்தில், இயல்பாகவே பொதுவான விலைமட்டங்களின் மீது அமுக்கங்களை விளைவிப்பதோடு, பல்வகையான தட்டுப்பாடுகளையும் அருமைகளையும் தோன்றச் செய்யும்.

இதுவரை காலமாக ஒப்பியல்பில் நிலைவரமான விலைவாசிகளை இலங்கை அனுபவித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். மகாயுத்தத்தின் பின் உள்ள காலத்திற் பொதுவான விலைமட்டங்கள் ஏனைய நாடுகளில் அதிகரித்ததிலும் பார்க்க இலங்கையிற் குறைவாகவே அதிகரித்தது. ஆயினும், இலங்கையில் இவ்விதம் நடைபெற்றமை, கேள்விகளில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப இறக்குமதிகளை ஒப்பியல்பிற் தடையின்றி அனுமதிப்பதன் மூலம் பொருட்களின் நிரம்பல்களை இசைவாக்கக்கூடிய ஆற்றல் இலங்கைக்கு இருந்ததன் பயனுகவே ஏற்பட்டது என்பது, முக்கியமாகக் கவனிக்கத்தக்கது. பொருளாதாரத்தின் நுகர்ச்சிக்கும் முதலீட்டத்திற்கும் கிடைக்கக்கூடிய மொத்தப் பொருள்வளங்களில் இறக்குமதிகள் பெரும்பகுதியான பங்கை வகிக்கின்றன. எனவே இறக்குமதிகள் இலகுவாக வந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பத்தில், உள்நாட்டு விலைமட்டங்களில் ஏற்படும் மாற்றங்கள், உள்நாட்டில் உள்ள கேள்விகளின் மாற்றங்களிலும் பார்க்க வெளிநாட்டு விலைகளிலுள்ள மாற்றங்களையே கூடுதலாகப் பிரதிபலிப்பனவாகும். இறக்குமதிகளைக் கட்டுப்படுத்த

வேண்டிய தேவை ஏற்படுமிடத்து நிலைமை அடிப்படையான விதத்தில் மாற்றமடைகின்றது. எனவே முற்காலத்தில் விலைவாசிகளை நிலைவரப்படுத்துதற்குத் துணைபுரிந்த காரணி, இயங்கமுடியாமற் போகின்றது. இவ்வகையான நிலையில், முற்காலத்தில் நிலவிய தன்மைகளைத் தன்னியக்கமாகவே தொடர்ந்தும் கையாள நினைத்தல் சாத்தியமாகாது. எனவே உள்நாட்டு விலை மட்டங்களின் போக்கு எவ்வாறு இருக்கும் என்பது, தற்போது கிடைக்கக்கூடிய மொத்த நிரம்பல்களுக்கேற்ப உள்நாட்டுக் கேள்விகளை இசையச் செய்வதிற் பெறக்கூடிய வெற்றியிற் தங்கியுள்ளது.

1961ம், 1962ம் ஆண்டுகளில் நாணய விரிவு, இறக்குமதிக் கட்டுப்பாடு ஆகியவை விலைவாசிகளின் மீது உண்டுபண்ணிய பிரதிபலன்கள், முற்காலத்தில் இறக்குமதி செய்யப்பட்ட கையிருப்புகள் தொடர்ந்தும் கிடைக்கக்கூடியனவாக இருந்தமை போன்ற காரணிகளால், ஓரளவு தரப்படுத்தப்பட்டுள்ளது. ஆனல், இறக்குமதிக் கையிருப்புகளின் மாற்றங்கள் சம்பந்தமாக உறுதியான புள்ளி விபரங்கள் இல்லையாயினும், இக்காரணியின் தரப்படுத்தும் சக்திகள், 1963ம் ஆண்டிற் பலம்குன்றினவெனத் தெரிகின்றது. அதேபோல, இறக்குமதிப் பொருட்களின் நிரம்பல்களின் மீதுள்ள கட்டுப்பாடுகளினல் விலைவாசிகளிற் தோன்றும் பிரதிபலன்களை, அப்பொருட்களுக்குப் பதிலான உள்நாட்டு உற்பத்திப் பொருட்கள் கிடைக்கக்கூடியனவாக இருத்தல், ஈடுசெய்யக்கூடும். இறக்குமதிப்பொருட்களுக்குப் பதிலான பொருட்கள் தயாரிக்கப்படுவதிற் கடந்த இரண்டு வருடங்களாக உண்மையில் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டது. ஆனல், அவ்வகையான உள்நாட்டு உற்பத்தியின் அளவும், எண்ணிக்கைப் பரப்பும், இறக்குமதிப்பொருட்களின் குறைவால் மொத்த நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சியை முற்றாக ஈடுசெய்வதற்கு இன்னும் போதாமல் இருந்ததென்பது தெளிவு.

1963ம் ஆண்டு இலங்கையின் அனுபவத்தோடு தொடர்புள்ள இரண்டாவது காரணி, வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சியாகும். மகாவங்கியின் குறிகாட்டிகளின்படி (1958=100 என்ற அடிப்படையில்) வர்த்தக மாற்று விகிதம், 1962ம் ஆண்டிற்குரிய 98 புள்ளிகளிலிருந்து, 1963ம் ஆண்டு 89 புள்ளிகளுக்கு 9.2 சதவீதத்தால் வீழ்ச்சியுற்றது.[1] இது முழுவதும் இறக்குமதி விலைக்குறிகாட்டி 1962ம் ஆண்டிற்குரிய 95 புள்ளிகளிலிருந்து 1963ம் ஆண்டில் 105 புள்ளிகளுக்கு அதிகரித்தமையினல் ஏற்பட்டதாகும். ஏற்றுமதிகளுக்கான விலைக்குறிகாட்டி இவ்விரு வருடங்களிலும் மாற்றமின்றி 93 புள்ளிகளாகவே இருந்தது.

வர்த்தக மாற்றுவிகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, உள்நாட்டுப் பொருளாதாரத்தின் மீது இரண்டு விதத்திற் பாதகமான விளைவுகளை உண்டுபண்ணிற்று. முதலாவதாக, இலங்கையின் ஏற்றுமதி வருமானங்களின் கொள்வனவு வலுவை அது குறைத்தமையால், ஒரு குறிப்பிட்ட அளவுள்ள வெளிநாட்டுச் சொத்துக்களைக் கொண்டு கொள்வனவு செய்யக்கூடிய இறக்குமதிகளின் மொத்த அளவையும் அது குறைவுறச் செய்தது. இலங்கையின் வர்த்தக மாற்று விகிதம் இவ்வருடம் வீழ்ச்சியடையாமல் இருந்திருப்பின் அல்லது சீர்திருத்தமடைந்திருப்பின், இலங்கை 1963ம் ஆண்டிற் செய்த வெளிநாட்டுச் செலவீடுகளினல் உண்மையிற் பெற்ற இறக்குமதிகளிலும் பார்க்கக் கூடுதலான அளவுடைய இறக்குமதிகளைப் பெற்றிருக்க முடிந்

1. பக்கம் 11ல் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.

திருக்கும். அன்றேல், இதேயளவான இறக்குமதிக்கட்டுப்பாடுகளுடன் இதிலும் திருத்தமான வர்த்தக மாற்று விகிதமும் இருந்திருப்பின் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்து நிலைமையில் ஏற்பட்ட அமுக்கங்களின் கடூரமான தன்மை குறைவானதாக இருந்திருக்கும். இந்த இரண்டு போக்குகளில் ஏதாயினும் சரி, இலங்கைப் பொருளாதாரத்திற்கு நற்பயனைத் தந்திருக்கும். ஏனெனில், இறக்குமதி செய்யப்பட்ட நிரம்பல்களின் வரத்து அதிகரித்ததாய் இருப்பின், அது விலைவாசிகளின்மேல் உள்ள அமுக்கங்களை குறைக்க உதவி புரிந்திருக்கும். அன்றேல் வெளிநாட்டுச் சொத்துநிலை பலமடைந்திருப்பின், இலங்கை தன் வருங்கால வெளிநாட்டுச் செலவீட்டுத்தேவைகளைச் சமாளிக்கத்தக்க ஆற்றலைப் பலப்படுத்தியிருக்கும். வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, மேலே கூறப்பட்ட ஒரு வழியிலோ அல்லது மற்ற வழியிலோ இலங்கையின் நிலைமையைக் கஷ்டமாக்கிற்று.

இரண்டாவதாக, வர்த்தக மாற்றுவிகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, அரசாங்கத்தின் மொத்த வரவு செலவுத்திட்ட நிலைமையில், குறிப்பாக 1963ம் ஆண்டின் கடைக்காற் பகுதியிற், பாதகமான பிரதிபலன்களை உண்டு பண்ணிற்று. இக்காலத்தில் அரசாங்கத்தினல் இறக்குமதி செய்யப்பட்டு மான்னியமான, அல்லது நிலையான விலைகளின்படி விநியோகிக்கப்படும் உணவுப் பொருட்களின் வெளிநாட்டு விலைகளில் ஓர் அதிகரிப்பு ஏற்பட்டது. அரிசி, கோதுமைமா, சீனி ஆகிய மூன்று பொருட்களினதும் வெளிநாட்டு விலைகள் 1963ம் ஆண்டில் ஒரு உயர்ச்சிப்போக்கைக் காட்டின. சீனியின் விலை அதிகரிப்பு அதிதீட்சணமானதாகும். இப்பொருட்களின் உள்நாட்டுச் சில்லரை விலைகள் உயர்த்தப்படாமல் இருந்தமையால், இம்மாற்றங்கள் அரசாங்கத்தின் உணவு மான்னியச் செலவுகளை அதிகரிக்கச் செய்து, வரவு செலவுத்திட்டக்குறையையும் அதேயளவால் விரிவடையச் செய்யும். இதன் பயனாக விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டத்தின் பிரமாண்டமும் அதிகரிக்க நேரிடுவதால், அவ்வகையான விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டம் முழுவதையும் ஈடுசெய்யும் முகமாக வெளிநாட்டுச் சொத்துக்கள் வீழ்ச்சியடையாவிடின், பொருளாதாரத்திலுள்ள உள்நாட்டு விலைவாசிகளின்மேற் காணப்படும் வீக்கத்தன்மையான அமுக்கங்கள் இன்னும் மேலோங்க நேரிடும். உணவுப் பொருட்களின் அதிகரித்த விலைகள், 1963ம் ஆண்டின் கடைக்காற் பகுதியும் சேர்மதியான, 1963-64ம் நிதியாண்டையே பிரதானமாகப் பாதிக்கும்.

அபிவிருத்தியடைகின்ற அநேக நாடுகளைப் போலவே, இலங்கையும் மகாயுத்தத்திற்குப் பிற்பட்ட காலத்தில், வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட கூர்மையான ஏற்ற இறக்கங்களாற் பாதிக்கப்பட்டது. இலங்கையின் வர்த்தக மாற்று விகிதக் குறிகாட்டி (1958=100 என்ற அடிப்படையில்) கோறியா யுத்தத்தைத் தொடர்ந்து 1950ம் ஆண்டில் மிக உச்சமான 114 புள்ளிகளுக்கு அதிகரித்து, பின் 1952ம் ஆண்டில் ஆகக்குறைவான 84 புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்றது. பின்னர், 1955ம் ஆண்டில் தேயிலை விலைகள் குறிப்பிடும்படியாக அதிகரித்ததைத் தொடர்ந்து இலங்கையின் வர்த்தக மாற்று விகிதமும் 112 புள்ளிகளுக்கு உயர்ந்தது. ஆனல் 1957ம் ஆண்டில் அது 94 புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்றது. 1958, 1959, 1962 ஆகிய ஆண்டுகளிலும் சிறிய அளவான அதிகரிப்புக்கள் காணப்பட்டனவாயினும், 1963ம் ஆண்டில், முன்னர் கூறியவாறு இக்குறிகாட்டி 89 புள்ளிகளுக்கு வீழ்ச்சியுற்றது. வர்த்தக மாற்றுவிகிதம் ஆதரவற்ற முறையிற் குறைவுற்றமை, இலங்கையின் ஏற்றுமதிப் பொருட்களில் ஏற்பட்ட உற்பத்தி அதிகரிப்பினல் கிடைக்கக்கூடிய நற்பயன்களில் ஒருபகுதியைக் குறைத்தது. 1948ம்

ஆண்டிற்கும், 1963ம் ஆண்டிற்கும் இடையில் இலங்கையின் மொத்த ஏற்றுமதி அளவுகள் 2.1 சதவீதமான வருடாந்தச் சராசரி விகிதப்படி அதிகரித்தன. ஆயினும் இதே காலத்தில் வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட மாற்றங்களின் பயனுல், இலங்கையின் ஏற்றுமதிகளின் கொள்வனவு வலு (அதாவது, இறக்குமதிவிலைக் குறிகாட்டியின்படி சுருக்கி அளவிடப்பட்ட ஏற்றுமதிப் பெறுமானங்கள்) ஆக 0.9 சதவீதமான வருடாந்தச் சராசரி விகிதத்தினுல் மட்டும் அதிகரித்தது.

முன்னர் கூறியவாறு, 1963ம் ஆண்டில் இலங்கையின் வர்த்தக மாற்று விகிதத்தில் ஏற்பட்ட வீழ்ச்சி, இலங்கைப் பொருளாதாரத்திற் காணப்பட்ட கஷ்டங்களை மேலும் மோசமாக்கிற்று. கடந்த சில ஆண்டுகளிற் தொடர்ச்சியாக ஏற்பட்ட நாணய விரிவுகள் ஏற்கனவே உண்டுபண்ணிய நிலைமைகளின் பயனுல் இறக்குமதிகளைக் கட்டுப்படுத்தவேண்டிய நிலையும், விலைமட்டங்களின் மீதுள்ள வீக்கமான அமுக்கங்கள் அதிகரிக்க வேண்டிய தன்மையும் காணப்பட்டன. வர்த்தக மாற்றுவிகிதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டமை, நாட்டின் சென்மதி நிலுவைகளின் மீதும் அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின்மீதும் கூடுதலான கஷ்டங்களை விளைவித்து மேற்கூறிய நிலைமைகளை இன்னும் மோசமடையச் செய்தது. ஏனைய ஆதரவற்ற தன்மைகளும் காணப்பட்டன. ஏற்றுமதிப்பயிர்களின் மொத்த உற்பத்தியில் ஏற்பட்ட ஒரு வீழ்ச்சி, ஏற்றுமதி வருமானங்களைத் தாக்கியது என்பதுடன், அரிசி உற்பத்தி 1962ம் ஆண்டிலும் பார்க்கச் சிறிய அளவால் அதிகரித்தமை கையிருப்புகளைக் குறையச்செய்து அரிசி இறக்குமதிகளையும் அதிகரிக்கச் செய்தது. இவ் ஆண்டின் இறுதிப் பகுதியிற் துறைமுகத்தில் வேலைநிறுத்தங்கள் ஏற்பட்டமை, ஏற்றுமதிகளின் வெளியேற்றத்தைக் குறையச் செய்தமையினுலும், கப்பற் தாமதவரி, கப்பற்கூலி ஆகிய செலவீடுகளை அதிகரிக்கச் செய்தமையினுலும், இலங்கைக்கு நேர்ந்த கஷ்டங்களை மேலும் மோசமடையச் செய்தன.

இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் கூடுதலாக இருந்திருப்பின், ஏற்றுமதி வருமானங்களிலும் இறக்குமதிச் செலவீடுகளிலும் ஏற்பட்ட பாதகமான ஏற்ற இறக்கங்களைத் தாங்குவதற்கு இலங்கை கூடிய வலிமையுடையதாக இருந்திருக்கும் என்பது தெளிவாகின்றது. துர்அதிர்ஷ்டவசமாக, 1963ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் ஏற்கனவே குறைந்த மட்டத்தை அடைந்துவிட்டன. அவை 1955ம் ஆண்டின் இறுதியில் இருந்த ரூபா 12290 இலட்சத்திலிருந்து, 1962ம் ஆண்டின் இறுதியில் ரூபா 5040 இலட்சத்திற்குக் குறைவுற்றிருந்தன. இது பெரும்பாலும் அரசாங்க வரவு செலவுத்திட்டங்களிலுள்ள மொத்தக்குறைகளின் பிரதிபலனுக இறக்குமதிகளின் மீது ஏற்றமான கேள்விகள் பிறப்பிக்கப்பட்டமையினுல் ஏற்பட்டது. வெளிநாட்டுச் சொத்துக்களை மேலும் குறைப்பதன் மூலமாகவும் வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரிப்பதன் மூலமாகவும், 1963ம் ஆண்டு இலங்கை தனது சென்மதி நிலுவைகளின் நடைமுறைக் கணக்குகளிற் குறைவடைந்து அவற்றை நிதியீட்டிக்கொள்ள முடிந்தது. தெளிவாகச் சொல்லின் இலங்கை 1963ம் ஆண்டிற் தனது ஏற்றுமதிகளின் கொள்வனவு வலுவில் வீழ்ச்சி ஏற்பட்ட முழு அளவிற்கு தன் இறக்குமதிகளைக் குறைக்கவில்லை. ஆனுல் வெளிநாட்டுச் சொத்துக்களில் மேலும் வீழ்ச்சி ஏற்பட்டு வெளிநாட்டுப் பொறுப்புக்களிலும், முக்கியமாக, குறுகிய காலப் பொறுப்புக்களில், அதிகரிப்பு ஏற்பட்டுக் காணப்பட்டமையால் இவ் ஆண்டில் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் எய்தியுள்ள நிலை வருங்காலத்தில் ஏற்படத்தக்க பாதகமான ஏற்ற இறக்கங்களைச் சமாளிப்பதற்குச் சிறிதும் இடமளிக்காததாக அமைந்துள்ளது. வர்த்தக மாற்று

விகிதம் ஒப்பியல்பிற் பாதகமானதாக இருக்க நேரிடின், இலங்கை தன் இறக்குமதிகளை மேலும் குறைக்க வேண்டியதாக அல்லது வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரிக்க வேண்டியதாக நேரிடுமேயன்றி வேறுவழி காண முடியாது. எனினும், நாணய விரிவினால் ஏற்படும் மொத்தக் கேள்விகளும் அத்துடன் குறைக்கப்படாவிடின், இறக்குமதிக் குறைப்பின் பயனாக மேலும் நெருக்கமான தட்டுப்பாடுகளும், விலைமட்டங்களின்மீது வீக்கமான அமுக்கங்களும் ஏற்படும். வெளிநாட்டுப் பொறுப்புக்களை அதிகரித்தல், மேற்கூறிய தன்மைகளை வருங்காலத்திற்கு ஒத்திவைப்பதற்கு மட்டும் வாய்க்கத்தக்கது.

1950ம் ஆண்டிற்கும், 1960ம் ஆண்டிற்குமிடையிலுள்ள காலத்தில், இலங்கையின் அனுபவங்களைப் போலவே, அபிவிருத்திபெறும் அநேக நாடுகளின் வெளிநாட்டுச் சொத்துக்களிலும் வீழ்ச்சி ஏற்பட்டமை உண்மையே. இது ஒருவகையில் வர்த்தக மாற்றுவிகிதம் வீழ்ச்சியுற்றமையோடும், மற்றொரு வகையில் இந்நாடுகள் தத்தமது அபிவிருத்தி வேகத்தை அதிகரிக்க முயன்றமையோடும் சம்பந்தமுடையதாகும். ஒரு கூடிய விறுவிறுப்பான பொருளாதார வளர்ச்சிக்கு எப்பொழுதும் அதிகரித்த அளவுடைய இயந்திரங்களையும் உபகரணங்களையும், மூலப்பொருட்களையும் இறக்குமதி செய்யவேண்டியிருப்பதோடு உயர்ந்த அளவுடைய நுகர்ச்சிப் பொருட்களையும் இறக்குமதி செய்ய நேரிடுகின்றது. ஏற்றுமதி வருமானங்கள் போதுமான அளவிற்கு அதிகரிக்காமல் இருக்கும் வேளையில், அந்நாடுகள் தம்மிடமுள்ள வெளிநாட்டுச் சொத்துக்களைக் குறைக்க முயல்வதைவிட வேறுவழியில்லை. இவ் உண்மைகள் இலங்கையின் அனுபவத்திற்கும் பொருத்தமானவையாகும். ஆனால் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியும் அதற்கு உடந்தையாக இருந்த மொத்த அரசாங்க வரவு செலவுத்திட்டக்குறைகளும், மூலதன ஆக்கத்தின் பேரில் ஏற்பட்ட அதிகரிப்புகளினால் மட்டுமன்றி, நுகர்ச்சியின் பேரில் ஏற்பட்ட அதிகரிப்புகளின் பலனாலும் தோன்றின. உண்மையிற், கடந்த சில ஆண்டுகளில், அரசாங்கத்துறையிலும், பொருளாதாரத்தின் சகல துறைகளிலும் நுகர்ச்சிச் செலவுகளினால் ஏற்பட்ட அதிகரிப்புகள், மூலதன ஆக்கத்தினால் ஏற்பட்ட அதிகரிப்பிலும் பார்க்கக் குறிப்பிடத்தக்க அளவிற் கூடுதலாக இருந்தன. அன்றியும், அபிவிருத்திக்கு நிதியீட்டுவதற்காகவேனும் கையிலுள்ள வெளிநாட்டுச் சொத்துக்களை உபயோகித்தல் முற்றுப்பெறும் செயல்போலானது என்பதும் உணரத்தக்கது. ஏனெனில், அவை உபயோகிக்கப்பட்டபின், வெளிநாட்டுச் செலவீடுகள் வெளிநாட்டு வருவாய்களுக்கேற்ப அமையவேண்டி நேரிடுவதோடு, இக் குறிக்கோளை அடைவதற்கு நாட்டின் நாணயக் கொள்கைகளும், நிதிக் கொள்கைகளும் மேலதிகமான வீக்கத்தன்மையான விளைவுகளை விலைவாசிகளின்மீது விளைவிக்காமல் இருக்குமாறு இசைவாக்கி அமைக்கப்படவேண்டும். அன்றியும், வெளிநாட்டுச் சொத்துக்களை அபிவிருத்தித் தொழிற்பாடுகளுக்காகவேனும் குறைக்க நேரிட்டாலும், எதிர்கால வெளிநாட்டு வருவாய்களிலும், செலவீடுகளிலும் ஏற்படத்தக்க ஏற்ற இறக்கங்களைச் சமாளிப்பதற்குத் தேவையான ஆகக்குறைந்த மட்டத்திலும் பார்க்கக் குறைந்த மட்டத்திற்கு அவற்றைக் குறைப்பது விவேகமற்றது என்பதும் உணரத்தக்கது. இலங்கையின் சென்மதி நிலுவைகள் எப்பொழுதும் வெளிநாட்டு விலைவாசிகளில் ஏற்படும் மாற்றங்களினாற் பெரிதும் பாதிக்கப்படத்தக்கன என்பதோடு, நாட்டின் மொத்தப். பொருளாதாரத் தொழிற்பாடுகளில் வெளிநாட்டு வர்த்தகம் கூடுதலான அங்கம் வகிக்கின்றது. எனவே இலங்கை போன்ற ஒரு நாட்டின் குறைந்தமட்டமான வெளிநாட்டுச் சொத்துக்கள் குறைந்த ''வெட்டையான'' பொருளாதாரமுள்ள ஒரு நாட்டிற்குத் தேவையான வெளிநாட்டுச் சொத்துக்களிலும் பார்க்க ஒப்பியல்பிற் கூடுதலாகவே இருக்கவேண்டும் என்பது இயல்பு. வெளிநாட்டுச் சொத்துக்கள் நாட்டின்

பொருளாதாரத்தை வெளிநாடுகளில் ஏற்படும் ஏற்ற இறக்கங்களின் தாக்குதல்களிலிருந்து பாதுகாக்க உதவியளிக்கத் தக்கன. அவை போதாமல் இருக்கும் காலங்களில், வெளிநாட்டுக் கொடுப்பனவுகளை வெளிநாட்டு வருவாய்களில் ஏற்படும் மாற்றங்களுக்கேற்ப எப்பொழுதும் இசைவாக்கி அமைக்க வேண்டிய நிலை, அவை குறுகிய காலங்களாயிருந்தாலும் சரி, ஏற்படுகின்றது. அவ்விதம் செய்யும் பொழுது நுகர்ச்சிப்பொருட்களின் நிரம்பல்களை மாத்திரமன்றி, இயந்திரங்கள், உபகரணங்கள், கைத்தொழிலுக்கான மூலப் பொருட்கள் ஆகியனவற்றின் நிரம்பல்களையும் பாதிக்கத்தக்க நிலைப்பெயர்ச்சிகள் ஏற்படநேரிடும்.

### 1963ம் ஆண்டின் வெளிநாட்டுக் கொடுப்பனவுகள்

*1963*ம் ஆண்டு இலங்கையின் வெளிநாட்டு வருவாய்களும் கொடுப்பனவுகளும் இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களின்மீதும் பொறுப்புக்களின் மீதும் உண்டுபண்ணிய பிரதிபலன்களைப் பின்வரும் அட்டவணை சுருக்கமாகக் காட்டுகின்றது. இலங்கையின் சென்மதி நிலுவைகளைப் பற்றி இதிலும் பார்க்க விளக்கமான தெளிவுரைகள் இவ் அறிக்கையின் IIம் பகுதியிற் தரப்பட்டுள்ளன.

**அட்டவணை I-1**

**இலங்கையின் சென்மதி நிலுவைகள், 1960-1963**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1960 | 1961 | 1962 | 1963 தற்காலிக மானவை |
|---|---|---|---|---|
| 1. வணிகப் பொருட்கள் | | | | |
| ஏற்றுமதிகள் .. .. | 1796 | 1707 | 1763 | 1725 |
| இறக்குமதிகள் .. .. | —2006 | —1794 | —1906 | —1854 |
| வர்த்தக நிலுவை .. | — 210 | — 87 | — 143 | — 129 |
| 2. சேவைகள் | — 32 | — 18 | — 8 | — 22 |
| 3. நன்கொடைகள் | + 22 | + 11 | + 7 | + 5 |
| 4. நடைமுறைக் கணக்கு நிலுவை | | | | |
| **நிதியீட்டிய வகை** | — 220 | — 94 | — 144 | — 146 |
| 5. தனிப்பட்டோர் மூலதனம் (1) | | | | |
| நீண்டகால .. .. | + 2 | — 8 | — 2 | + 4 |
| குறுகியகால .. .. | — 7 | + 14 | — | — 11 |
| 6. அரசகரும மூலதனமும் வங்கி மூலதனமும் (1) | | | | |
| (i) நீண்டகால வெளிநாட்டுப் பொறுப்புக்களின் நிகர மாற்றம் (2) .. .. | + 20 | + 19 | + 40 | + 75 |
| (ii) குறுகியகால வெளிநாட்டுப் பொறுப்புக்களின் நிகரமாற்றம் .. .. | — 17 | + 81 | + 47 | + 42 |
| (iii) வெளிநாட்டுச் சொத்துக்களில் மாற்றம் .. .. | + 193 | + 10 | + 28 | + 42 |
| (iv) ஏனைய .. .. | | — 2 | | |
| 7. பிழைகளும் தவறுகளும் | + 29 | — 19 | + 31 | — 6 |

(1) சக அடையாளம், சொத்துக்களின் வீழ்ச்சியையும் பொறுப்புக்களின் அதிகரிப்பையும் குறிக்கும்.

(2) அட்டவணை IIஏ-3ல் ''மொத்த நிதியீட்டக்குறை'' என்பதிற் காட்டப்பட்டுள்ளவாறு திருப்பிக்கொடுக்கப்பட்ட கடன்களின் நிகரத் தொகை.

மேலுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டது போல், 1963ம் ஆண்டில் இலங்கையின் வணிகப்பொருட் கணக்கில் ரூபா 1290 இலட்சம் கொண்ட குறை ஏற்பட்டது. இது 1963ம் ஆண்டில் ஏற்றுமதி வருமானங்கள் வீழ்ச்சியுற்ற பொழுதிலும் முந்தைய வருடத்தில் ஏற்பட்ட குறையாகிய ரூபா 1430 இலட்சத்திலும் பார்க்கக் குறைவானதாகும். வணிகப் பொருட்களின் கணக்கிலுள்ள குறை வீழ்ச்சியடைந்தமை முழுவதும், இறக்குமதிச் செலவீடுகள் குறைவுற்றமையினுலேயே ஏற்பட்டது. ஆயினும், வணிகப்பொருட்கணக்கிலுள்ள குறை வீழ்ச்சியடைந்து காணப்பட்ட போதிலும், 1963ம் ஆண்டு இலங்கையின் நடைமுறைக்கணக்கில் ஏற்பட்ட மொத்தக் குறை 1962ம் ஆண்டிலேற்பட்ட குறையிலும் பார்க்கப் பெரிதாகவே இருந்தது. இது, பெரும்பாலும் கொழும்புத்துறைமுகத்தின் வருமானங்கள் வீழ்ச்சியுற்றதைத் தொடர்ந்து சேவைகளின் பேரிலுள்ள நிகரக்குறை அதிகரித்தமையினுலும், வெளிநாட்டுச் சொத்துக்களின் வட்டி வருமானங்கள் வீழ்ச்சியுற்றமையினுலும் ஏற்படலாயிற்று.

இறக்குமதிகளின் விலைகள் அதிகரித்த சந்தர்ப்பத்தில், இவ்வருடத்தில் இறக்குமதிகளின் மெய்மையான அளவு எவ்வளவு தூரம் குறைக்கப்பட்டது என்பதை, 1963ம் ஆண்டு இறக்குமதிச் செலவீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி ஓரளவு தெரிவிக்கின்றது. இலங்கையின் இறக்குமதிகளுக்கான மொத்தக் கொடுப்பனவுகள் 1962ம் ஆண்டிற்குரிய ரூபா 19060 இலட்சத்திலிருந்து, 1963ம் ஆண்டு ரூபா 18540 இலட்சத்திற்கு, ரூபா 520 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. ஆயினும், 1962ம் ஆண்டிற்கும் 1963ம் ஆண்டிற்கும் இடையில் இறக்குமதி விலைகளின் குறிகாட்டி 10.5 சதவீதத்தால் அதிகரித்தது. பல காரணங்களினுல் இக்குறிகாட்டியின் செம்மை குறுகி அமைந்துள்ளதாயினும்[1] இவ்வருடத்தில் இறக்குமதிகளின் விலைகள் குறிப்பிடும்படியாக அதிகரித்துள்ளன என்பதில் ஐயமில்லை. எனவே இறக்குமதி அளவுகளின் உண்மையான நிரம்பலில் ஏற்பட்ட வீழ்ச்சி, இறக்குமதிக் கொடுப்பனவுகளின் வீழ்ச்சி உணரும் அளவிலும் பார்க்கக் கூடுதலாக இருந்திருக்கவேண்டும். ஏனைய புள்ளிவிபரங்களும் இவற்றை உறுதிப்படுத்துகின்றன. இறக்குமதிகளுக்கான மொத்தக் கொடுப்பனவுகள் 1963ம் ஆண்டில் ரூபா 520 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன எனினும், அரசாங்கத்தினதும் அரசாங்க கூட்டுத்தாபனங்களினதும் இறக்குமதிச் செலவீடுகள், இறக்குமதி விலைகள் அதிகரித்த பொழுதும், ரூபா 1450 இலட்சத்தாற் குறைந்தன. மறுபுறத்தில், உணவுப் பொருட்களின் பேரில் எழுந்த அரசாங்கக் கொடுப்பனவுகள், பெரும்பாலும் அரிசி, சீனி, கோதுமைமா ஆகியனவற்றின் வெளிநாட்டு விலைகள் அதிகரித்தமையினுல், ரூபா 660 இலட்சத்தால் உயர்வுற்றன. அரசாங்கத்தின் ஏனைய இறக்குமதிகள், அதாவது இயந்திரங்கள், பொருட்கள் ஆகியன உட்பட்ட இறக்குமதிகளும், ரூபா 270 இலட்சத்தால் அதிகரித்தன. இறக்குமதி நிரம்பல்களில் ஏற்பட்ட வீழ்ச்சி உள்நாட்டுப் பொருளாதாரத்திலுள்ள விலைவாசிகளையும் தட்டுப்பாடுகளையும் அதிகரிப்பதற்குக் குறிப்பிடத்தக்க காரணியாக இருந்ததென்பதிற் சிறிதும் ஐயமில்லை.

1963ம் ஆண்டின் சென்மதிநிலுவைகளில் இன்னொரு குறிப்பிடத்தக்க அம்சம் யாதெனில், நடைமுறைக்கணக்கிலுள்ள குறைக்கு நிதியீட்டும் வகையால் வெளிநாட்டு நீண்டகாலக் கடன்பாடுகளில் ஏற்பட்ட மிதமான அதி

---

1. .கடந்த சில ஆண்டுகளில் இறக்குமதிகளின் அமைப்பில் மாற்றம் ஏற்பட்டுள்ளமையாலும், இறக்குமதிகளை விரிவாகத் தழுவாமல் அமையக்கூடிய (இதற்குள்ள காரணங்கள் பிறிதோரிடத்தில் விளக்கப்பட்டுள்ளன) சுங்கப் புள்ளிவிபரங்களை ஆதாரமாகக் கொண்டு கணிக்கப்படுவதனுலும், இவ் இறக்குமதி விலைக்குறிகாட்டிகளினதும் வர்த்தக மாற்று விகிதக்குறிகாட்டிகளினதும் செம்மை, குறைவுற்றுள்ளது,

கரிப்பாகும். தனிப்பட்டோரின் மூலதனங்களும் உட்பட்ட, நீண்டகால மூல தனங்களாகக் கிடைத்த வருமானம் 1963ம் ஆண்டில் ரூபா 790 இலட்சத்திற்கு அதிகரித்து, முந்தைய வருடங்களிலும் பார்க்கக் கூடுதலான விகிதாச்சாரமான பங்குடையதாய் நடைமுறைக்கணக்கிலுள்ள குறைக்கு நிதியீட்டிற்று. நடைமுறைக்கணக்கிலுள்ள குறைக்கு நிதியீட்டும் வகையால் நீண்டகால வெளிநாட்டுப் பொறுப்புக்களில் அதிகரிப்பு ஏற்படுதல், அபிவிருத்தியடைகின்ற பல நாடுகளில் ஒரு சாதாரண சம்பவமாகும். கடன்பாட்டு நியதிகள் சாதகமளிப்பனவாகவும், அக்கடன்கள் அபிவிருத்தித் திட்டங்களோடும் நிகழ்ச்சிகளோடும் தொடர்புள்ளனவாகவும் இருக்கப் பெறின், அவை எதிர்காலப் பொருளாதார நிலையையும் சென்மதி நிலுவை நிலையையும் பலமடையத்தக்க பலாபலனைத்தரும். இவ்வகையான நீண்டகாலக் கடன்பாடுகள் நீக்கப்பெற்ற நடைமுறைக்கணக்குக் குறைகளின் இயல்பினாற்றான் வெளிநாட்டுச் சொத்துக்களைக் குறைக்கவோ வெளிநாட்டுக் குறுகியகாலப் பொறுப்புக்களை அதிகரிக்கவோ நேரிடுகின்றது. நீண்டகால மூலதன வருவாய்கள் (அதாவது அரசகருமமும் தனிப்பட்டோரினதும் சேர்த்து) நீக்கிக் கணக்கிட்டபடி, இலங்கையின் நடைமுறைக் கணக்குக் குறை 1963ம் ஆண்டில் ரூபா 730 இலட்சமாக உள்ளது. இத்தொகைக்கு நிதியீட்டுதல், வெளிநாட்டுச் சொத்துக்களை ரூபா 420 இலட்சத்தாற் குறைப்பதன் மூலமாகவும், இலங்கையின் (அரசகருமமும் தனிப்பட்டோரினதும்) குறுகியகால வெளிநாட்டுப் பொறுப்புக்களை ரூபா 310 இலட்சத்தால் அதிகரிப்பதன் மூலமாகவும் செய்யப்பட்டது. குறுகியகால அரசகருமப் பொறுப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, பெரும்பாலும் இரு பக்க ஒப்பந்தங்களின்கீழ் இலங்கை கொடுக்குமதியாக உள்ள தொகைகளைக் குறிக்கும்.

வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சியையும் குறுகியகாலப் பொறுப்புக்களில் (தனிப்பட்டோரினதும் அரசகருமங்களினதும்) ஏற்பட்ட அதிகரிப்பையும் ஒன்று சேர்த்து நோக்குகையில், அவை அண்மையிலுள்ள முந்தைய வருடங்களில் இருந்ததிலும் பார்க்க 1962ம் ஆண்டிலும், 1963ம் ஆண்டிலும் குறைவாகக் காணப்பட்டன. இவ்விடயங்களின் மொத்தத் தொகைகள், முன்னுள்ள அட்டவணையிற் காட்டப்பட்டவாறு, 1960ம் ஆண்டில் ரூபா 1690 இலட்சமாகவும், 1961ம் ஆண்டில் ரூபா 1030 இலட்சமாகவும், 1962ம் ஆண்டில் ரூபா 750 இலட்சமாகவும் இருந்ததற் கெதிராக 1963ம் ஆண்டில் ரூபா 670 இலட்சமாக இருந்தன. எனினும், வெளிநாட்டுச் சொத்துக்கள் ஒப்பியல்பிற் தாழ்ந்த மட்டத்திற்கு ஏற்கனவே வீழ்ச்சியடைந்து விட்டனவென்பதோடு, வர்த்தக மாற்று விகிதமும் எதிர்காலத்திலேனும் சீர்திருத்தமடையுமோ அல்லது எப்பொழுது, எவ்வளவாற் சீர்திருத்தமடையும் என்பதற்காக அறிகுறிகளும் இல்லாத சந்தர்ப்பத்தில், 1963ம் ஆண்டில் ஏற்பட்ட மொத்தக்குறை சிறிதாகக் காணப்பட்டாலும் அது பெரிதும் கருத்திற் கொள்ளப்படவேண்டிய விடயமாகும். ஒன்றில் எதிர்கால வர்த்தகமாற்று விகிதத்தில் ஒரு குறிப்பிடும்படியான சீர்திருத்தம் ஏற்பட்டோ அல்லது குறுகியக்காலக் கடன்பாட்டு வசதி மேலும் இருந்தோ காணப்பட்டால் அன்றி, குறுகியகாலக் கடன்கள் திருப்பிக்கொடுக்கப்படும் பொழுது[1] இறக்குமதிகளை அல்லது வெளிநாட்டுச் சொத்துக்களை மேலும் குறைக்கவேண்டிய தேவை ஏற்படும் என்பது உட்கருத்தாகும்.

1. சர்வதேச நாணய நிதியிலிருந்து பற்றிய ரூபா 1076 இலட்சம் கொண்ட தொகை, பற்றிய திகதியிலிருந்து ஐந்து வருடங்களுக்குள் முற்றாகத் திருப்பிக்கொடுக்கப்படல் வேண்டும். இதன் கருத்து யாதெனில் 1961ம் ஆண்டு பற்றிய தொகை 1966ம் ஆண்டிலும், 1962ம் ஆண்டு பற்றிய தொகை 1967ம் ஆண்டிலும் திருப்பிக்கொடுத்து முடித்தல் வேண்டும் என்பதாகும்.

இலங்கையின் மொத்த வெளிநாட்டுப் பொறுப்புக்கள், 1962ம் ஆண்டிற்குரிய ரூபா 4739 இலட்சத்திலிருந்து 1963ம் ஆண்டில் ரூபா 5887 இலட்சத்திற்கு அதிகரித்தன. இதேகாலத்தில், அரசகருமக் குறுகியகாலப்பொறுப்புக்கள், ரூபா 1182 இலட்சத்திலிருந்து ரூபா 1576 இலட்சத்திற்கும், அரசகரும நீண்டகாலப் பொறுப்புக்கள் ரூபா 3557 இலட்சத்திலிருந்து ரூபா 4311 இலட்சத்திற்கும் அதிகரித்தன.

இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்கள் 1962ம் ஆண்டிற்குரிய ரூபா 5039 இலட்சத்திலிருந்து 1963ம் ஆண்டில் ரூபா 4623 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றன. ஸ்டேர்லிங் கடன்களை மீள்வதற்கான ஆழ்நிதிகளை நீக்கிப் பார்க்கின், 1963ம் ஆண்டின் முடிவிற்குரிய வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூபா 3588 இலட்சமாக உள்ளன. இதில் மகாவங்கியின் சர்வதேச ஒதுக்கு நிதி ரூபா 1142 இலட்சமாகவும், வர்த்தக வங்கிகளின் மிச்சங்கள் ரூபா 1053 இலட்சமாகவும், அரசாங்கத்தினதும் அரசாங்க முகவர் நிலையங்களினதும் முதலீடுகள் ரூபா 1393 இலட்சமாகவும் அமைந்தன. ஸ்டேர்லிங் கடன் ஆழ்நிதிகளை நீக்கியபின் இலங்கையின் நிகர வெளிநாட்டுச் சொத்துக்கள், 1963ம் ஆண்டின் இறக்குமதிப் பெறுமானத்திற் 19 சதவீதமாக உள்ளன. 1962ம் ஆண்டில் இவ் ஒப்பியல் விகிதாச்சாரம் 21 சதவீதமாக இருந்தது. 1963ம் ஆண்டுமுடிவில் மகாவங்கியின் சர்வதேச ஒதுக்குநிதியில் ரூபா 660 இலட்சம் கொண்ட தொகை அந்நிய பிணைப்பத்திரங்களிற் செய்த முதலீடுகளாகவும், ரூபா 482 இலட்சம் கொண்ட தொகை திரவமான அல்லது ஓரளவு திரவமான சொத்துக்களாகவும் இருந்தன. திரவச் சொத்துக்களில் ரூபா 153 இலட்சம் கொண்ட தொகை, இருபக்கச் சென்மதி ஒப்பந்தங்களின்கீழ் இலங்கைக்கு வருமதியான மிச்சங்களாக உள்ளன. சர்வதேச ஒதுக்குநிதிகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, இவ்வருடமுடிவிற் பெரும்பாலும் மிகத் தீட்சணமாகக் காணப்பட்டது. இது பெரும்பாலும், உணவுப்பொருட்களுக்கான கொடுப்பனவுகள் அதிகரித்தமையாலும், ஏற்றுமதிகள் (ஓரளவிற் துறைமுக வேலைநிறுத்தத்தைத் தொடர்ந்து) குறைவுற்றமையாலும் ஏற்பட்டது. 1964ம் ஆண்டின் முற்பகுதியான மாதங்களிலும் கூட இலங்கையின் வெளிநாட்டுச் சொத்துக்களின் மீது கடுமையான அழுக்கங்கள் காணப்பட்டன.[1]

## (3) நிதிமுறையும் நாணய விரிவும்

### (அ) அரசாங்க வரவுசெலவுத் திட்டம்

முன்னர் கூறப்பட்டவாறு, கடந்த சில ஆண்டுகளாக இலங்கையின் நாணயத்துறையிலும் நிதித்துறையிலும் காணப்பட்ட கஷ்டங்களுக்கு ஒரு அடிப்படையான காரணம், விரிவு விளைவிக்கத்தக்க மூலங்களிலிருந்து நிதி யீட்டப்படவேண்டிய அவசியத்தை உண்டுபண்ணிய மேலதிகமான அரசாங்க

1. 1963-64ம் ஆண்டிற்கான வரவு செலவுத்திட்டத்தைச் சமர்ப்பிக்கும் பொழுது நிதியமைச்சர் ஒரு அந்நிய செலாவணி வரவு செலவுத்திட்டம் தொகுக்கப்பட்டிருப்பதையும் அறிவித்தார். அதன்படி, 1963-64ம் நிதியாண்டிற்கான மொத்த வெளிநாட்டுச் செலவீடுகள் இவ்வாண்டில் எதிர்பார்க்கப்படும் வெளிநாட்டு வருவாய்களுக்கு மேற்படாமல் இருக்கும் எனவும், அதன்பயனுக இவ் ஆண்டின் வெளிநாட்டுச் சொத்துக்களில் எவ்வித மாற்றமும் ஏற்படாதெனவும் அறிவிக்கப்பட்டது. உணவுப்பொருட்கள், உரம், கப்பற்தாமதவரி ஆகியனவற்றுக்கான வெளிநாட்டுச் செலவீடுகள் அதிகரித்ததை முன்னிலையாகக் கொண்டு, இவ் அந்நிய செலாவணி வரவு செலவுத்திட்டத்திற் புகவேண்டிய திருத்தம் ஒன்று, நிதியமைச்சரால் 1964ம் ஆண்டு மாசி மாதம் 13ம் திகதி அறிவிக்கப்பட்டது. திருத்தியமைக்கப்பட்ட அந்நிய செலாவணி வரவு செலவுத்திட்டத்தின்படி ஏனைய வெளிநாட்டுச் செலவீடுகளிற் குறைப்பு ஏற்படுமெனவும், மேற்கூறப்பட்ட அதிகரித்த செலவுகளை அரைகுறையாக ஈடுசெய்வதற்கு அந்நிய உதவி அதிகரிக்குமெனவும் தெரிகிறது. இதன்படி 1963-64ம் நிதியாண்டில் வெளிநாட்டுச் சொத்துக்கள் ரூபா 570 இலட்சத்தால் வீழ்ச்சியடையுமெனவும் எதிர்பார்க்கப்படுகிறது. (1964 மாசி 13ம் திகதியின் அன்சாட்டின்படி).

வரவு செலவுத்திட்டக் குறையேயாகும். எனினும், மிக அண்மையான வருடங்களில் விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டங்களின் அளவு தொடர்ந்தும் அதிகமானதாக இருந்ததெனினும் அது மேலும் அதிகரிக்காவண்ணம் தடுக்கப் பட்டது என்பது கவனிக்கத்தக்கது. உண்மையில், 1960-61 நிதியாண்டின் பின், விரிவு விளைவிக்கத்தக்க மூலங்களிலிருந்து நிதியீட்டப்பட்ட தொகை மிதமாகக் குறைவுற்றது. இவ்வகையில், விரிவு விளைவிக்கத்தக்க மூலங்களி லிருந்து வரவு செலவுத்திட்டத்திற்கு நிதியீட்டப்பட்ட தொகை, 1959-60ம் நிதியாண்டில் மிக உச்சமான ரூபா 2511 இலட்சத்தை அடைந்திருக்கையில், அது 1960-61ம் நிதியாண்டில் ரூபா 2339 இலட்சத்திற்கும், 1961-62ம் நிதியாண்டில் ரூபா 1904 இலட்சத்திற்கும் வீழ்ச்சியுற்றது. நடைமுறைச் செலவும் மூலதனச் செலவும் உட்பட்ட மொத்தச் செலவுகள் தொடர்ச்சி யாக அதிகரித்த பொழுதிலும், மேற்கூறிய பலன்கள் அடையப்பெற்றன. இவ்வகைப் பலன்பெறுவதற்கு, வரித்துறையிற் பலமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அரசிறை கணிசமாக அதிகரித்தமையாலும், வங்கிகளல்லாத உள்நாட்டு மூலங்களிலிருந்தும் வெளிநாட்டு மூலங்களி லிருந்தும் அதிகரித்த அளவுகளிற் கடன்பட்டமையாலும், இது இயலு மாயிற்று.

விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டம் 1962-63ம் நிதியாண்டில் மேலும் குறைவடைந்தது. 1962-63ம் நிதியாண்டில் அரசாங்கத்தின் வரவு செலவுத் திட்டத்திற் காணப்பட்ட நிகரப் பண இயக்கக் குறையையும், விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டத்தின் அளவையும் பின்வரும் அட்டவணை முந்தைய வருடங்களுடன் ஒப்பிட்டுக் காட்டுகின்றது.

### அட்டவணை I-2

### குறைக்கு நிதியீட்டல், 1958/59 முதல் 1962/63 வரை

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | 1958/59 | 1959/60 | 1960/61 | 1961/62 | 1962/63 |
|---|---|---|---|---|---|
| 1. நிதியீட்டல், வங்கிகளல்லாத மூலங்களி லிருந்து (மொத்தம்) .. .. அதில் | 172·5 | 170·5 | 212·2 | 269·7 | 213·2 |
| (அ) நிர்வாகக் கடன்பாடு .. | 27·6 | 57·4 | 29·4 | 104·5 | — 33·8 |
| (ஆ) உள்நாட்டுச் சந்தைக் கடன்பாடு .. | 111·9 | 86·5 | 165·2 | 109·4 | 153·5 |
| (இ) அந்நிய கடன்களும் நன்கொடை களும் .. .. .. | 33·0 | 26·6 | 26·6 | 55·8 | 93·5 |
| 2. உள்நாட்டுக் கடன்பாடு, வங்கிகளி லிருந்து.. .. .. .. | 179·3 | 241·1 | 241·4 | 226·6 | 178·1 |
| 3. அரசாங்க பணமிச்சங்களை உபயோகித்தல் | 61·7 | 6·0 | இல்லை | —40·2 | 0·4 |
| 4. நிகரப் பணக்குறையின் மொத்தம் .. | 413·4 | 417·5 | 462·5 | 456·1 | 391·7 |
| 5. சீராக்கம், அமெரிக்க உதவிகளின் இணைக்கிணையான நிதிக் கணக்குகளின் மாற்றங்களுக்கேற்ப .. .. | —52·5 | 4·0 | — 7·5 | 4·0 | — 16·5 |
| 6. வரவு செலவுத்திட்டத்தின் நிகர விரிவுப் பாதிப்பு (2+3+5) .. .. | 188·5 | 251·1 | 233·9 | 190·4 | 162·0 |

Central Bank of Sri Lanka
22631

மேலே காட்டப்பட்டவாறு, விரிவு விளைவிக்கத்தக்க நிதியிடப்பட்டத்தின் அளவு 1961-62ம் ஆண்டிற்குரிய ரூபா 1904 இலட்சத்திற்கெதிராக, 1962-63ம் ஆண்டில் ரூபா 1620 இலட்சமாக அமைந்தது. இவ்வீழ்ச்சி; அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலுள்ள நிகரப் பணக்குறை, 1961-62ம் ஆண்டிற் காணப்பட்ட ரூபா 4561 இலட்சத்திலிருந்து, 1962-63ம் ஆண்டில் ரூபா 3917 இலட்சத்திற்குக் குறைக்கப்பட்டதன் பலனால், ஏற்பட்டதாகும். 1960-61ம் ஆண்டின் நிகரப்பணக்குறை ரூபா 4625 இலட்சமாக இருந்தது. 1960-61, 1961-62 ஆகிய நிதியாண்டுகளில் எய்தப்பட்ட அவ்வளவான நிகரப்பணக்குறைகளை அரசிறையில் ஏற்பட்ட பெரிய அதிகரிப்புகளினூடாக ஏற்கமுடிந்தது. அந்த ஆண்டுகளில் நடைமுறைச்செலவுகளிலும் மூலதனச் செலவுகளிலும் கணிசமான அதிகரிப்புகள் ஏற்பட்டன. ஆனால் இதற்கெதிராக 1962-63ம் ஆண்டின் அரசிறையில் ரூபா 272 இலட்சம் கொண்ட வீழ்ச்சி ஏற்பட்டது. இதேசமயத்தில் நடைமுறைச் செலவுகளும் ரூபா 157 இலட்சத்தால் அதிகரித்தமையினால் நிகரப்பணக்குறையிற் காணப்பட்ட வீழ்ச்சி, வரவு செலவுத்திட்டத்திலுள்ள மூலதனச் செலவீடுகள் குறைவுற்றமையையே பிரதிபலிக்கின்றது. 1962-63ம் ஆண்டில் வரவு செலவுத் திட்ட மூலதனச் செலவீடுகள் ரூபா 783 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன.

வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒதுக்குநிதிகளிலிருந்து செலவிடப்பட்டவையும் உட்பட்ட மூலதனச் செலவீடுகளில் ஏற்பட்ட வீழ்ச்சி, பெரும்பாலும் உள்ளூர் ஆட்சிச்சபைகள், அரசாங்க கூட்டுத்தாபனங்கள் ஆகியனவும் உட்பட்ட அரசாங்கமுகவர் நிலையங்களுக்கு கொடுக்கப்பட்ட கடன்கள் குறைவுற்றமையினால் ஏற்பட்டது. அரசாங்க முகவர் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட கடன்கள் 1962-63ம் ஆண்டில் ரூபா 762 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. மறுபுறத்தில், மெய்ச் சொத்துக்களைக் கொள்ளுதல், ஆக்குதல், பராமரித்தல் ஆகியனவற்றின் பேரில் அரசாங்கத்தினால் செய்யப்பட்ட மூலதனச் செலவீடுகளும் இவ்வருடம் ரூபா 135 இலட்சத்தால் வீழ்ச்சியுற்றன. அரசாங்க மூலதனச் செலவீடுகளின் பகுதியினூடாக அரசாங்க முகவர் நிலையங்களுக்கு வழங்கப்பட்ட கடன்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, இந்த முகவர் நிலையங்களினால் உண்மையிற் செய்யப்பட்ட மூலதனச் செலவீடுகளில் அதேயளவான மாற்றம் ஏற்பட்டதெனக் குறிப்பிடுவதல்ல. எனவே, அரசாங்கத்தின் மொத்த மூலதனச் செலவீடுகளில் ஏற்பட்ட மாற்றம், அரசாங்கத்துறையிலுள்ள மொத்த மூலதன ஆக்கத்தில் ஏற்பட்ட மாற்றத்தைச் சரியானபடி அளவிட்டுக்காட்டும் கருவியாகாது.

1962-63ம் ஆண்டின் மொத்த அரசிறையில் ஏற்பட்ட ரூபா 272 இலட்சம் கொண்ட வீழ்ச்சி, பெரும்பாலும் இறக்குமதித்தீர்வைகளினால் சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 673 இலட்சத்தாலும், ஏற்றுமதித் தீர்வைகளின் வருவாய் ரூபா 122 இலட்சத்தாலும், வருமான வரியினால் (மேலதிக அறவீடு நீக்கி) சேகரிக்கப்பட்ட தொகை ரூபா 147 இலட்சத்தாலும் வீழ்ச்சியுற்றமையினால் ஏற்பட்டது. சாராய விற்பனையாற் கிடைத்த இலாபங்கள் ரூபா 260 இலட்சத்தால் அதிகரித்தும்[1] புகையிலை வரியினாற் கிடைத்த தொகை ரூபா 175 இலட்சத்தால் உயர்வுற்றும், வருமானவரியின் மீதுள்ள மேலதிக அறவீடுகளினாற் சேகரிக்கப்பட்டதொகை ரூபா 111 இலட்சத்தால் அதிகரித்தும் இருந்தமை, மேற்கூறிய வீழ்ச்சியை ஓரளவு ஈடுசெய்தது. ஏனைய தலைகளின்கீழ் உள்ள அரசிறைகளிலும் சிறிய அதிகரிப்புகள் ஏற்பட்டன. இறக்குமதித்தீர்வை வருவாய்களில் ஏற்பட்ட வீழ்ச்சி உண்மையில் இறக்குமதிகளின் மீதுள்ள கட்டுப்பாடுகளின் பயனால் ஏற்பட்டது. ஏற்று

1. இவ்வீழ்ச்சி ஈடுசெய்யப்பட்டமைக்கு, கடந்த வருடங்களிலிருந்து திரட்டப்பட்டு வந்த இலாபங்களிலிருந்து ரூபா 180 இலட்சம் 1962/63ம் ஆண்டிற்கான அரசிறையோடு கூட்டப்பட்டதும், ஓரளவு காரணமாகும்.

மதித்தீர்வைகளினற் சேகரிக்கப்பட்ட தொகையும், ஓரளவிற்கு வருமான வரியினற் கிடைத்த வருவாய்களும், வீழ்ச்சியுற்றமை, ஏற்றுமதி வருவாய்களும் உற்பத்தியாளரின் வருமானங்களும் குறைவுற்றதைப் பிரதிபலிக்கின்றன. புகையிலையின் மீதும் மதுபானங்களின்மீதும் உள்ள உள்நாட்டுச் சுங்க வரிகளினல் அரசாங்கத்திற்குக் கிடைக்கின்ற பெரிய அரசிறைகள் குறிப்பிடத்தக்கனவாகும். 1962-63ம் ஆண்டில் இவ்விடயங்களினற் கிடைத்த மொத்த வருவாய் ரூபா 2108 இலட்சமாக விளங்கிற்று. இதே வருடத்தில் வருமானவரியினற் கிடைத்த மொத்தத்தொகை (மேலதிக அறவீடும் உட்பட) ரூபா 2588 இலட்சமாகும்.

வங்கிகளல்லாத மூலங்களிலிருந்து நிதியீட்டப்பட்ட அரசாங்க மொத்தப் பணக்குறையின் அளவு 1962-63ம் ஆண்டில் உண்மையிற் குறைவுற்றது. ஆனல் இவ்வீழ்ச்சிக்கு முக்கியமான காரணம், முந்தைய வருடத்தில் ரூபா 1045 இலட்சமாக விளங்கிய நிர்வாகக்கடன்பாடு இல்லாமற் போனதேயாகும். ஒப்பியல்மாருக 1962-63ம் ஆண்டில் நிர்வாகக்கடன்பாட்டின் பேரில் ரூபா 338 இலட்சம் கொண்ட நிகரக் கொடுப்பனவு ஏற்பட்டது. ஆயினும், 1962-63ம் ஆண்டில், வங்கிகளல்லாத உள்நாட்டுச் சந்தைக்கடன்பாடுகளிலிருந்து கிடைத்த தொகையும், அந்நிய கடன்கள் நன்கொடைகளிலிருந்துகிடைத்த தொகையும், முந்தைய வருடத்திலும் பார்க்கக் கணிசமான அளவால் உயர்ந்து விளங்கின. இவற்றுள், வங்கிகளல்லாத உள்நாட்டு சந்தைக்கடன்பாடு முந்தைய வருடத்திலும் பார்க்க ரூபா 441 இலட்சத்தால் அதிகரித்தது. இவ்வதிகரிப்புப் பெரும்பாலும், ஊழியர் சேமநிதி ஏனைய நம்பிக்கை நிதிகள், சேமநிதிகள், இளைப்பாறற் சம்பள நிதிகள் ஆகியன வற்றினலும், காப்புறுதிக் கூட்டு நிலையங்கள் குறிப்பாகக் காப்புறுதிக் கூட்டுத் தாபனம், ஏனைய கூட்டுநிலையங்கள் ஆகியனவற்றினலும் உதவப்பட்ட தொகைகள் அதிகரித்தமையால் ஏற்பட்டது. புதிதாக வெளியிடப்பட்ட அரசாங்கப் பிணைகளுக்கான வட்டி விகிதம் 1963ம் ஆண்டு ஆனி மாதம் முதல் $\frac{1}{4}$ சதவீதத்தால் $4\frac{1}{2}$ சதவீதத்திற்கு அதிகரிக்கப்பட்டது. அந்நிய கடன்கள் நன்கொடைகளிலிருந்து கிடைத்த தொகை 1962-63ம் ஆண்டில் ரூபா 377 இலட்சத்தால் அதிகரித்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக வரவு செலவுத்திட்டக்குறைக்கு இத்துறையிலிருந்து நிதியீட்டப்பட்ட தொகையின் அளவுகளில் மிதமான அதிகரிப்புக் காணப்பட்டது. இது அந்நிய உதவிகளைப் பயன்படுத்துதலில் ஏற்பட்ட ஒரு சீர்திருத்தத்தின் பிரதிபலிப்பென்பதில் ஐயமில்லையெனினும், இவ்வாறு பயன்படுத்தப்பட்ட அளவுகள், ஆதியில் வரவு செலவுத்திட்டம் புகுத்தப்படும் பொழுது எதிர்பார்க்கப்பட்ட அளவுகளிலும் பார்க்கக் குறைவாகவே இருந்தன.

வங்கித்துறைகளிலிருந்து அரசாங்கம் பெற்ற கடன்பாடுகளின் அளவு, 1961-62ம் ஆண்டிற்குரிய 2266 இலட்சத்திலிருந்து 1962-63ம் ஆண்டில் ரூபா 1781 இலட்சத்திற்கு வீழ்ச்சியுற்றது. ஆனல் இவ்வகையான கடன்பாடுகளுக்கு முக்கிய கருவியாக இறைசேரி உண்டியல்கள் இருந்து வந்தன. நிலுவையில் நிற்கத்தக்க இறைசேரி உண்டியல்களின் அளவு சம்பந்தமாக அமைந்த சட்டபூர்வமான எல்லை, பாராளுமன்றத்தினல் 1963 பங்குனி 21-ம் திகதி, ரூபா 10000 இலட்சத்திலிருந்து ரூபா 11500 இலட்சத்திற்கு ரூபா 1500 இலட்சத்தால் உயர்த்தப்பட்டது. ஆயினும், 1962-63ல் இறைசேரி உண்டியல்களினூடாக உண்மையிற் பெற்ற நிகரக்கடன்பாடுகள் ரூபா 1250 இலட்சமாக உள்ளன. இறைசேரி உண்டியல்களுக்குப் பணம் ஒப்பியோரில் மகாவங்கியே மறுபடியும் முக்கிய இடம் வகித்தது. 1962-63ம் ஆண்டில்

மகாவங்கியின் உடமையில் இருந்த இறைசேரி உண்டியல்கள் ரூபா 1245 இலட்சத்தால் அதிகரித்தன. 1963ம் ஆண்டு முடிவில் மகாவங்கியின் உடமையில் இருந்த இறைசேரி உண்டியல்களின் மொத்தத் தொகை ரூபா 10069 இலட்சமாக விளங்கிற்று. வர்த்தக வங்கிகளின் உடமைகளான அரசாங்கப் பிணைகளில் (இறைசேரி உண்டியல்களும், வரி ஒதுக்குநிதிப் பத்திரங்களும் உட்பட) 1962-63ம் ஆண்டில் ஏற்பட்ட அதிகரிப்பு ஒப்பியல்பிற் சிறிதாகவே இருந்தது. இவ் அதிகரிப்பு முந்தைய வருடத்திற்குரிய ரூபா 645 இலட்சத்திற் கெதிராக 1962-63ல் ரூபா 220 இலட்சமாகக் காணப்பட்டது.

மேலே கூறப்பட்ட விரிவுரைகள் அரசாங்கத்தின் அரசிறையிலும் செலவுகளிலும் 1962-63ம் ஆண்டில் ஏற்பட்ட மாற்றங்களை முந்தைய வருடத்தோடு ஒப்பிட்டுக்காட்டின. ஆயினும் 1962-63ம் ஆண்டிற்கான அரசிறைகள் செலவுகள் ஆகியவை சம்பந்தமான மூலமதிப்பீடுகளுக்கும் அவ் ஆண்டில் உண்மையாகப் பெறப்பட்ட அரசிறைகள் செலவுகள் ஆகியன வற்றிற்கும் இடையே பெரிய வித்தியாசங்கள் காணப்பட்டன. மூலமதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட அரசிறையிலும் பார்க்க உண்மையிற் கிடைத்த தொகை ரூபா 1235 இலட்சத்தாற் குறைவுற்றது. இது பெரும்பாலும் இறக்குமதித்தீர்வைகளாற் கிடைத்த வருவாய் எதிர்பார்க்கப்பட்ட தொகையிலும் பார்க்க ரூபா 1085 இலட்சத்தாற் குறைவுற்றமையினுல் ஏற்பட்டது. இதே சமயத்தில் மொத்தச் செலவிலும் ரூபா 1315 இலட்சம் கொண்ட ஒரு புறநடையான பெரியகுறை ஏற்பட்டது. இதில் மூலதனச் செலவுகளின் பேரில் ஏற்பட்டகுறை ரூபா 710 இலட்சமாகவும், நடைமுறைச்செலவுகளின் பேரில் ஏற்பட்டகுறை ரூபா 605 இலட்சமாகவும் பங்குபெற்றன. எனினும், 1962-63ம் ஆண்டில் உண்மையாக ஏற்பட்ட நிகரப் பணக்குறையான ரூபா 3917 இலட்சம் கொண்ட தொகை, மதிப்பீட்டில் எதிர்பார்க்கப்பட்ட நிகரப் பணக்குறையான ரூபா 4133 இலட்சத்திலும் பார்க்க, ஆக ரூபா 216 இலட்சத்தால் மட்டும் குறைவானதாக விளங்கிற்று.

1963ம் ஆண்டின் நாலாம் காற்பகுதி, நடைமுறையிலுள்ள நிதி வருடமான 1963-64ம் ஆண்டிற்குரிய வரவு செலவுத்திட்டத்தின்கீழ் அமைவானதாகும். இவ் வரவு செலவுத்திட்டம் சம்பந்தமான விபரங்கள் இவ் அறிக்கையின் பிறிதோர் பகுதியிற் தரப்பட்டுள்ளன. முழுமையாக நோக்கின் இவ்வரவு செலவுத்திட்டம், ரூபா 4745 இலட்சம் கொண்ட மொத்தக் குறையை இலக்காகக் கொண்டுள்ளது. ஆழ்நிதிகளுக்கான உதவு தொகைகளுக்கும், நேரடியாகக் கொடுத்து மீளப்படும் பொதுப்படுகடன்களுக்கும், இடம்விட்டு நோக்கின் இவ்வரவு செலவுத்திட்டம், ரூபா 4180 இலட்சம் கொண்ட நிகரப் பணக்குறையை இலக்காக உடையது. விரிவு விளைவிக்கத்தக்க மூலங்களிலிருந்து நிதியீட்டப்படும் தொகை முந்தைய வருடங்களிலும் பார்க்கக் குறைக்கப்படுமென இவ்வரவு செலவுத்திட்டத்தில் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இவ்விதம் நிதியீட்டப்படும் மொத்தத்தொகை ரூபா 545 இலட்சமென மதிப்பிடப்பட்டிருக்கிறது.[1] மிகுதியாக உள்ள நிகரப் பணக்குறைக்கு நிதியீட்டுதல், உள்நாட்டுச் சந்தைக் கடன்பாட்டிலிருந்து ரூபா 2200 இலட்சமும், அந்நிய உதவிகளிலிருந்து ரூபா 1750 இலட்சமும், நிர்வாகக் கடன்பாடுகளிலிருந்து ரூபா 250 இலட்சமும், பெறுவதன் மூலமாகச் செய்யப்படும்.

1963-64ம் ஆண்டின் வரவு செலவுத்திட்டத்தில் மதிப்பிடப்பட்ட மொத்த அரசிறை (புதிய அரசிறைகளிலிருந்து கிடைக்கக்கூடிய தொகையும் உட்பட) ரூபா 17876 இலட்சமாகும். இது 1962-63ம் ஆண்டில் உண்மையிற்

---

1. 1963ம் ஆண்டின் நிதிச்சட்டம், இறைசேரி உண்டியல்களினூடாகக் கடன்படும் எல்லையை ரூபா 1000 இலட்சத்தால் உயர்த்திற்று.

கிடைத்த அரசிறையிலும் பார்க்க ரூபா 1942 இலட்சம் உயர்வானதாகும். புதிய அரசிறை நடவடிக்கைகளினுல் ரூபா 1190 இலட்சம் சேகரிக்கப்படுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது. அவையாவன, விற்பனை வரியிலிருந்து கிடைக்குமென மதிப்பிடப்பட்ட ரூபா 400 இலட்சம்,[1] அதிகரித்த இறக்குமதித்தீர்வைகளினுற் கிடைக்குமென மதிப்பிடப்பட்ட ரூபா 400 இலட்சம், ஒரு தேசிய லொத்தரிலிருந்து கிடைக்குமென மதிப்பிடப்பட்ட ரூபா 150 இலட்சம், அந்நிய செலாவணி வரியினுற் கிடைக்குமென மதிப்பிடப்பட்ட ரூபா 100 இலட்சம், ஆகியனவாகும். புதிய அரசிறை நடவடிக்கைகளிலிருந்து சேகரிக்கப்படும் தொகையில், ரூபா 310 இலட்சம் கொண்ட தொகை வாழ்க்கைச் செலவைக் குறைப்பதற்கான சில சலுகைகளினுற் குறைவடையும். வாழ்க்கைச் செலவைக் குறைக்கும் நோக்கமாக உள்ள சலுகைகளில், கோதுமைமாவின் விலையைக் குறைத்தலினுல் ரூபா 200 இலட்சம் கொண்ட நட்டமும், ஆடைவகைகள், மோட்டார்களுக்கான உபபகுதிகள், மண்ணெண்ணெ ஆகியவற்றின்மீதுள்ள இறக்குமதித்தீர்வைகளைக் குறைத்தலினுல் ரூபா 110 இலட்சம் கொண்ட அரசிறைக்குறையும், அமைந்துள்ளன. எனவே, புதிய நடவடிக்கைகளினுல் அரசிறையில் ஏற்படத்தக்க நிகர அதிகரிப்பு, ரூபா 880 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. குறைந்த வருமானத் தொகுதியைச் சேர்ந்த வருமானவரி இறுப்போருக்கும் சலுகை வழங்கப்பட்டுள்ளது. இதன் பயனுக ஏறக்குறைய 25,000 அல்லது 28,000 வரியிறுப்போர் வருமான வரியிலிருந்து விதிவிலக்குப்பெறுவர்.

மொத்த நடைமுறைச் செலவு (அதாவது மூலதன விடயங்களும் ஆழ்நிதிக்கான உதவுதொகைகளும் நீக்கி) ரூபா 16607 இலட்சமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய வருடமான 1962-63ல் உண்மையாக ஏற்பட்ட நடைமுறைச்செலவான ரூபா 15249 இலட்சத்திலும் பார்க்க, ரூபா 1358 இலட்சம் மேலதிகமானதாகும். இவ் அதிகரிப்பு பெரும்பாலும், உணவு மான்னியச் செலவு, பொதுப்படுகடன்வட்டி, இளைப்பாறற் சம்பளங்கள் ஆகியனவற்றிற்காக அதிகரித்த தொகைகள் ஒதுக்கப்பட்டமையால் ஏற்பட்டது. மீண்டுவரும் செலவுக்கான வாக்குப்பணங்களிலுள்ள மூலதன விடயங்களும், வரவு செலவுத்திட்டத்திற்கு அப்பாற்பட்ட ஒதுக்குநிதிகளிலிருந்து செய்யப்படும் மூலதனச் செலவீடுகளும் உட்பட்ட, மொத்த மூலதனச் செலவீடுகளும் ரூபா 6394 இலட்சமாகுமென மதிப்பிடப்பட்டுள்ளது. இது முந்தைய வருடத்தில் உண்மையாக ஏற்பட்ட மூலதனச் செலவீடான ரூபா 4959 இலட்சத்திலும் பார்க்க ரூபா 1435 இலட்சம் கூடியதொகையாகும்.

வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டபின் உணவுப் பொருட்களின் வெளிநாட்டு விலைகளில், குறிப்பாக சீனியின் விலையில், ஒரு கூர்மையான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. இதன்பயனுக உணவு மான்னியச் செலவிற்கென மதிப்பிடப்பட்ட தொகையிலும் ஒரு அதிகரிப்பு ஏற்பட்டுள்ளது. வெளிநாட்டு விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பும், கப்பற்தாமத வரிச் செலவுகளின் அதிகரிப்பும், உணவுப் பொருட்களின் கொள்வனவுக்கான மொத்த அரசாங்கச் செலவையும்—அதன்பயனுக உணவு மான்னியச் செலவையும்—ரூபா 1670 இலட்சத்தால் அதிகரிக்கச் செய்யுமென மதிப்பிடப்பட்டுள்ளது.[2] இச்சம்பவங்களின் வெளிப்படையிலும், அரசிறையில் ஏற்படக்கூடிய வீழ்ச்சியை முன்னிட்டும் நோக்கின், ஏனைய செலவுகளிற் கணிசமான

1. பாராளுமன்றத்தினுல் வாக்களிக்கப்பட்ட மதிப்பீடுகளின்படி எதிர்பார்க்கப்பட்டதொகை ரூபா 450 இலட்சமாக உள்ளது.

2. நிதி அமைச்சரின் உரை, 1964 மாசி 13ம் திகதியின் அன்சாட்டின்படி.

வீழ்ச்சி ஏற்பட்டோ அல்லது செலவுகளைக் குறைப்பதற்கும் அரசிறையை அதிகரிப்பதற்கும் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டோ இருந்தாலன்றி, 1963-64ம் ஆண்டின் மொத்தப் பணக்குறையும், விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டத்தின் அளவும், ஆதியில் எதிர்பார்க்கப்பட்ட தொகையிலும் பார்க்க மேலதிகமானவையாய் விளங்கும் என்பது தெளிவாகின்றது. எதிர்பார்க்கப் பட்ட அளவிலும் பார்க்கக் கணிசமாக அதிகரித்த அளவுடைய விரிவு விளைவிக்கத்தக்க குறை ஏற்படின், கடந்த மூன்று வருடங்களாக இக்குறையிற் காணப்பட்ட வீழ்ச்சியான போக்கு எதிர்மாறடைய நேரிடுவதுமன்றி, பொதுவான விலைமட்டங்களின்மீதும் அது மேலும் பாதகமான பலாபலன் களை விளைவிக்கும்.

**(ஆ) தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிக் கொடுகடன்**

முந்தைய ஆண்டுகளில் நாணய விரிவிற்குத் துணையாய் இருந்த முக்கிய விரிவுக்காரணி, அரசாங்க வரவு செலவுத்திட்டங்களிலுள்ள மொத்தக் குறைகளேயாகும். தனிப்பட்டோர் துறையின் பேரில்—புள்ளிவிபரக் கஷ்டங் களினால் அரசாங்கக் கூட்டுத்தாபனங்களும் இதில் உட்படும்படியாக வகுக்கப் பட்டுள்ளது—வர்த்தக வங்கிகள் செய்த கொடுகடன் ஆக்கம் இதுகாறும் ஒப்பியல்பிற் குறைந்த அளவுடையதாகவே இருந்துவந்தது. உதாரணமாக, 1962ம் ஆண்டில் வங்கிகளிலிருந்து அரசாங்கம் பெற்ற கடன்கள் ரூபா 2502 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், தனிப்பட்டோர் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்கள் ரூபா 422 இலட்சத்தால் அதிகரித்தன. 1961ம் ஆண்டில் வங்கிகளிலிருந்து அரசாங்கம் பெற்ற கடன்கள் ரூபா 1641 இலட்சத்தால் அதிகரித்த பொழுது தனிப்பட்டோர் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்கள் ஆக ரூபா 125 இலட்சத்தால் மட்டும் அதிகரித்தன. இதற்கு எதிர்மாறாக, 1963ம் ஆண்டில் இந்த அமைப்பில் ஒரு குறிப்பிடத்தக்க மாற்றம் ஏற்பட்டது. இவ்வருடத்தில், வங்கிகளி லிருந்து அரசாங்கம் பெற்ற கொடுகடன்கள் ரூபா 1411 இலட்சத்தால் அதிகரித்திருக்கையில், தனிப்பட்டோர்துறைக்கான வர்த்தகவங்கிக் கொடு கடன்கள், ஏற்றுமதி உண்டியல்கள் நீக்கி, ரூபா 1242 இலட்சத்தால் அதிகரித் துள்ளன. அதாவது, 1963ம் ஆண்டில் தனிப்பட்டோர் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன் விரிவு, மொத்த நாணய விரிவில் ஒரு முக்கிய காரணியாக அமைந்து, அரசாங்க நிதியின் விரிவு விளைவுகளில் ஏற்பட்ட மிதமான வீழ்ச்சியை மேலதிகமாக ஈடுசெய்து நின்றது.

முந்தைய வருடாந்த அறிக்கைகளில் எடுத்துக்கூறப்பட்டுள்ளவாறு, அரசாங்க நிதியின் விரிவு விளைவுகள், வங்கிகளின் திரவச்சொத்து நிலையைப் பலமடையச்செய்வதால் வங்கிகள் தமது இரண்டாந்தரமான கொடுகடன் ஆக்கத்தை விரிவித்துத் தனிப்பட்டோர் துறைக்குக் கடன் வழங்கக்கூடிய வலிமையும் அதிகரிக்கின்றது. ஆயினும், முந்தைய வருடங்களில் நிதிவிரிவு களின் பயனால் வர்த்தக வங்கிகளின் திரவச் சொத்துநிலையில் ஏற்பட்ட பலன்களை, அதிகரித்த இறக்குமதிச் செலவீடுகளும், பாதகமான சென்மதி நிலுவை நிலையும், கணிசமான அளவால் ஈடுசெய்தன. எனினும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் புகுத்தப்பட்டமையோடு இக்காரணிகளின் ஈடுசெய்பலன் களும் குறைவுற்றன. அத்துடன் வங்கிகளின் திரவச் சொத்துக்களும் அதி விரைவாக அதிகரிக்கலாயின. ஆகவே, 1963ம் ஆண்டில் வர்த்தகவங்கி களால் விரிவிக்கப்பட்ட கொடுகடன் ஆக்கம் மேற்கூறிய விடயங்களுடன் தொடர்புடையது என்பதிற் சிறிதேனும் ஐயமில்லை.

தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் அளித்த முற்பணங்களில் 1963ம் ஆண்டு ஏற்பட்ட அதிகரிப்புகளைப் பின்வரும் அட்டவணை சுருக்க மாகக் காட்டுகின்றது. வங்கித் துறையின் தொழில் விருத்திகள் சம்பந்த மான பல விரிவுரைகள் இவ் அறிக்கையின் பிறிதோர் பகுதியிற் கொடுக்கப் பட்டுள்ளன.

அட்டவணை I-3

தனிப்பட்டோர் துறைக்கு வர்த்தக வங்கிகள் அளித்த முற்பணங்கள்
(மார்கழி 1962 முதல் மார்கழி 1963 வரை)

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | மார்கழி 1962 | மார்கழி 1963 | மாற்றம் |
|---|---|---|---|
| (அ) ஒன்றுசேர்க்கப்படும் பணங்கள் .. .. | 64·4 | 82·1 | + 17·7 |
| (ஆ) உள்நாட்டு உண்டியல்கள் .. .. .. | 6·6 | 3·7 | — 2·9 |
| (இ) இறக்குமதி உண்டியல்கள் .. .. | 49·6 | 62·1 | + 12·5 |
| (ஈ) ஏற்றுமதி உண்டியல்கள் .. | 60·8 | 72·8 | + 12·0 |
| (உ) மேலதிகப் பற்றுக்கள் .. .. | 279·7 | 331·9 | + 52·2 |
| (ஊ) கடன்கள் .. .. .. | 167·7 | 213·0 | + 45·3 |
| மொத்தம் | 628·8 | 765·6 | +136·8 |

மேலுள்ள எண்தொகைகளிற் காட்டப்பட்டவாறு, 1963ம் ஆண்டில் வர்த்தக வங்கிகளின் கொடுகடன்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற்குக் கடன் களும் மேலதிகப் பற்றுக்களுமே முக்கிய கருவிகளாக அமைந்தன. ஒன்று சேர்க்கப்படும் பணவிடயங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு, பெரும்பாலும் உள் நாட்டு அரிசிக்கான உத்தரவாத விலைத்திட்டத்தின் தொழிற்பாடுகளுக்காக வழங்கப்பட்ட குறுகியகால முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பின் பிரதி பலிப்பாகும். மொத்த முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பிற் பெரும் பகுதியானவை இலங்கையர்களின் வங்கிகளினூடாக ஏற்பட்டன. மேலுள்ள அட்டவணையிற் காட்டப்பட்ட ரூபா 1368 இலட்சம் கொண்ட மொத்த முற்பணங்களின் அதிகரிப்பில், ரூபா 1133 இலட்சம் கொண்ட தொகை இலங்கையர்களின் வங்கிகளால் வழங்கப்பட்ட முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பையும், ரூபா 235 இலட்சம் கொண்ட தொகை அந்நிய வங்கி களால் வழங்கப்பட்ட முற்பணங்களில் ஏற்பட்ட அதிகரிப்பையும் குறிக் கின்றன.

அபிவிருத்தி ஏற்படும் பொழுது பொருளாதாரத் தொழிற்பாடுகள் வளர்ச்சியடைவதற்கு அதிகரித்த அளவுடைய கொடுகடன்கள் தேவையாதல் இயல்பு. எனவே இலங்கையிற் புதிய தயாரிப்புத் தொழில்களும் நிறுவப் பட்டு, கமத்தொழிற் துறையிலும் ஏனையதுறைகளிலும் உள்ள தொழிற்பாடு களும் அதிகரிக்கும் பொழுது இயல்பாகவே கொடுகடன்களுக்கான கேள்வி களும் அதிகரிக்கும். கிராமப் பகுதிகளுக்கான கொடுகடன் வசதிகளை அதி கரித்தல் அண்மைவருடங்களிற் குறிப்பான முக்கியத்துவம் பெற்றுள்ளது. 1963ம் ஆண்டில் இலங்கையர்களின் வங்கிகளால் வழங்கப்பட்ட முற்பணங் களில் ஒரு கணிசமான பகுதி கூட்டுறவுச் சங்கங்களுக்கு வழங்கப்பட்ட கொடுகடன்களின் அதிகரிப்போடு சம்பந்தமுடையதாக இருக்கக்கூடும். அத் துடன், கிராமப்பகுதிகளிலுள்ள உற்பத்தியாளர்கள், நிலையங்களல்லாத மூலங்களிலிருந்து ஏறுக்குமாறான வட்டி விகிதங்களிற் கடன் படுதலைத் தடுக்கும் நோக்கமாக அத்துறைகளுக்குப் பதிலான வங்கிக்கொடுகடன் வசதிகளை அல்லது கூட்டுறவுக் கொடுகடன் வசதிகளை அமைத்தலும், விரும்பத்தக்க

செயலாகும். வங்கிகளின் முற்பணங்களைத் தேவைகளின்படியும் தொழிற்துறைகளின்படியும் பாகுபடுத்தி ஆராயுமிடத்து, அவற்றிற் பெரும்பகுதியான அதிகரிப்பு வர்த்தகத் தேவைகளுக்காக, அதாவது பெரும்பாலும் ஏற்றுமதிப்பொருட்கள் உள்நாட்டுப்பொருட்கள் ஆகியனவற்றின் வணிகத்தோடு சம்பந்தமான தேவைகளுக்காக வழங்கப்பட்டது எனத் தெரிகிறது. 1963ம் ஆண்டில் வர்த்தகத் தேவைகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்கள் முழுமையில் ரூபா 760 இலட்சத்தால் அதிகரித்தன என்பதோடு, அதில் ஏற்றுமதி இறக்குமதி வணிகங்களல்லாத ஏனைய வர்த்தகத் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 308 இலட்சத்தாலும் அதிகரித்தன. கமத்தொழிற் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 88 இலட்சத்தாலும், கட்டட ஆக்கம் பொறியியல் ஆகியனவும் உட்பட்ட கைத்தொழிற் தேவைகளுக்கான முற்பணங்கள் ரூபா 173 இலட்சத்தாலும் அதிகரித்தன. ''பல்வேறு தொழில்கள்'' என்ற தொகுதிக்கான முற்பணங்களில் ஒப்பியல்பில் ஒரு பெரிய—ரூபா 503 இலட்சம் கொண்ட—அதிகரிப்புக் காணப்பட்டது. எனினும், நிதித் தேவைகள், நுகர்ச்சித்தேவைகள் ஆகியவற்றிக்கான முற்பணங்கள் முறையே ரூபா 152 இலட்சத்தாலும், ரூபா 129 இலட்சத்தாலும் வீழ்ச்சியுற்றன.

உள்நாட்டுப் பொருளாதாரத்தில் வீக்கத்தன்மையான அமுக்கங்கள் ஏற்பட்டுள்ள சந்தர்ப்பத்தில், வர்த்தக வங்கிக் கொடுகடன்களின் அதிகரிப்பிலுள்ள இரண்டு அம்சங்களை இடையருது விழிப்புடன் பரிசீலனை செய்ய வேண்டியதவசியமாகும். முதலாவதாக, கொடுகடன்களில் ஏற்படும் அதிகரிப்பு முதனிலையில் உற்பத்தித் தேவைகளுக்காகவேயன்றி நுகர்ச்சித்தேவைகளுக்கல்ல என்பதையும், அதிர்ஷ்டத்தை எதிர்பார்த்துக் கையிருப்புகளை வைத்திருப்பதற்கான நிதியீட்டங்கள் மிகக் குறைந்தமட்டத்திற்குத் தாழ்த்தி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதையும், உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டியது அவசியமாகும். இரண்டாவதாக, கொடுகடன் விரிவினுல் ஏற்படும் மொத்த அதிகரிப்பு, மொத்தப் பணநிரம்பல் நிலைமையின் தோரணைப்படியும் உற்பத்தித் தொழிற்பாடுகளுக்கான தேவைகளின் தோரணையின்படியும் மிகையற்றதாக அமைந்துள்ளதென்பதை உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டியதும் முக்கியமானதாகும். உற்பத்தித் தேவைகளுக்கான கொடுகடன்களாயிருந்தாலும், அவை மிகைப்படின், குறுகிய காலத்தில் வீக்கத்தன்மையான அமுக்கங்கள் செறிந்து விளையக்கூடும் என்பதும் உணரத்தக்கது. உண்மைக்கு மாருன அதிட்டத்தை எதிர்பார்த்த தேவைகளுக்காகவோ அல்லது நுகர்ச்சித் தேவைகளுக்காகவோ அமைந்த கொடுகடன்கள் 1963ம் ஆண்டில் அதிகரித்தன என்பதற்கான நேரடியான ஆதாரங்கள் எதுவும் காணப்படவில்லை. முன்னர் தெரிவிக்கப்பட்டவாறு, நுகர்ச்சித் தேவைகளுக்காக வழங்கப்பட்ட முற்பணங்களின் மொத்தத் தொகை 1963ம் ஆண்டு வீழ்ச்சியுற்றது. ஆயினும், உற்பத்திக்கும், வர்த்தகத்திற்கும், பல்வேறு தேவைகளுக்கும் என எடுக்கப்பட்ட சில கடன்கள், முக்கியமாகச் சிறுதொகைகளாக உள்ள கடன்கள், நுகர்ச்சிக்காக உபயோகிக்கப்பட்டிருக்கவும் கூடும்.

கொடுகடன்களின்மீது முந்தைய வருடங்களிற் புகுத்தப்பட்ட ஒரு பரப்பான கட்டுப்பாடுகளையும், தேர்ந்தெடுக்கப்பட்ட கட்டுப்பாடுகளையும் மகாவங்கி இவ்வருடத்திலும் நடைமுறையில் வைத்திருந்தது. தனிப்பட்டோர் துறைக்கான வர்த்தகவங்கிக் கொடுகடன்களில் ஏற்பட்ட விரிவிற் பெரும் பகுதியானவை 1963ம் ஆண்டின் இறுதிப்பகுதியில் ஏற்பட்டன. இத்துறையின் அபிவிருத்திகளைத் தெளிவாக ஆராயும்வரை, வங்கிக் கொடுகடன்களின் மீது ஏற்கனவே உள்ள கட்டுப்பாடுகளை மேலும் கடூரமாக்காமல் வைத்திருக்க

மகாவங்கி முடிவு செய்தது. ஆனல், தேவை ஏற்பட்டால் மேலும் கூடுதலான நடவடிக்கை எடுப்பதை நோக்கமாகக் கொண்டு, மேற்கூறிய போக்குகளைத் தெளிவாக இடையருது பரிசீலனை செய்யவேண்டியது அவசியமாகும். எனினும், முந்தைய வருடாந்த அறிக்கைகள் பலவற்றில் அழுத்திக்கூறப் பட்டுள்ளவாறு, நாணயத்துறையிலுள்ள கொள்கைகள் நிதித்துறையின் சீர்திருத்தக் கொள்கைகளுக்குத் துணையாக அமையவேண்டும்.

**(இ) பண நிரம்பல்**

மேலே கூறப்பட்ட விரிவுக்காரணிகளின் பலனல்—அதாவது, வங்கிகளிலிருந்து அரசாங்கம் பெற்ற கடன்பாடுகளினலும், தனிப்பட்டோர் துறைக்கான வர்த்தக வங்கிக் கொடுகடன்களினலும்—பணநிரம்பலின் மேல் ஏற்பட்ட நிகர விளைவுகளைப் பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**அட்டவணை I-4**

**பணநிரம்பலில் ஏற்பட்ட மாற்றங்கள்**
**(1962ம் ஆண்டு இறுதிமுதல் 1963ம் ஆண்டு இறுதிவரை)**

பத்து இலட்சம் ரூபாய்களில்

| | |
|---|---|
| **விரிவுக்காரணிகள்** | |
| (அ) வங்கிகளிலிருந்து அரசாங்கக்கடன்பாடு | 141·1 |
| (ஆ) தனிப்பட்டோர் துறைக்கான வர்த்தக வங்கிக்கொடுகடன் | 124·2 |
| (இ) வர்த்தக வங்கிகளின் ஏனைய பொறுப்புக்களின் (நிகர) குறைவு | 33·9 |
| மொத்தம் | 299·2 |
| **சுருக்கக்காரணிகள்** | |
| (அ) வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் மாற்றம் | 53·2 |
| (ஆ) தவணை, சேமிப்பு வைப்புக்களில் அதிகரிப்பு | 63·4 |
| (இ) அரசாங்கப் பண மிச்சங்கள் | 8·3 |
| (ஈ) சிராக்கங்கள் | 10·9 |
| மொத்தம் | 135·8 |
| **பணநிரம்பலில் நிகர மாற்றம்** | +163·3 |

மேலே காட்டப்பட்டவாறு, 1963ம் ஆண்டு இலங்கையின் மொத்தப் பணநிரம்பல்—பொதுமக்களிடமுள்ள நாணயங்களும் கேள்விவைப்புக்களும் உட்பட—ரூபா 1633 இலட்சத்தால் அதிகரித்தது. இது முந்தைய வருடத்திலும் பார்க்க 12.2 சதவீதமான உயர்ச்சியாகும். பணநிரம்பலில் ஏற்பட்ட இந்த விகிதாச்சாரம் கொண்ட அதிகரிப்பு, அண்மை வருடங்களில் ஏற்பட்ட அதிகரிப்பு விகிதங்களிலும் பார்க்கக் கணிசமான அளவு மேலதிகமானதாய் அமைந்துள்ளது. உதாரணமாக, 1960, 1961, 1962 ஆகிய ஆண்டுகளின் பணநிரம்பலில் ஏற்பட்ட அதிகரிப்பு விகிதங்கள் முறையே 2.6 சதவீதமாகவும், 6.6 சதவீதமாகவும் 4.2 சதவீதமாகவும் உள்ளன. முந்தைய வருடங்களின் போதும், விரிவுக் காரணிகளின் மொத்தப் பெறுமானம் உயர்ந்து விளங்கியமைக்குப் பெரும்பாலும் அரசாங்க வரவு செலவுத் திட்டக் குறைகளே வகைதந்தன. ஆனல் அவற்றின் விளைவால் பணநிரம்பலின்மீது தோன்றிய பலன்கள், வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்கள் பெரும் அளவாற் குறைக்கப்பட்டமையாற் கணிசமாக ஈடுசெய்யப்பட்டன. 1963ம் ஆண்டில் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி மிதமானதாக இருந்ததாயினும், இறக்குமதிகளின்மீது கட்டுப்பாடுகள் அமைக்கப்

பட்டிருந்தமையால், இவ்வீழ்ச்சி முந்தைய வருடங்களிலும் பார்க்கக் குறைவாகவே காணப்பட்டது. ஆகவே பணநிரம்பலின் மீது இக்காரணி விளைவித்த ஈடுசெய்யும் பலன் குறைவுற்றது. 1963ம் ஆண்டு அரசாங்கப் பணமிச்சங்களில் ஏற்பட்ட ரூபா 83 இலட்சம் கொண்ட அதிகரிப்பும் 1962ம் ஆண்டில் ஏற்பட்ட ரூபா 761 இலட்சம் கொண்ட அதிகரிப்பிலும் பார்க்கக் குறைவாகவே இருந்தது.

1963ம் ஆண்டிலும், 1962ம் ஆண்டிலும் தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்களில் ஏற்பட்ட பெரிய அதிகரிப்புகள், ஒரு குறிப்பிடத்தக்க அம்சமாகும். தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்கள் 1963ம் ஆண்டில் ரூபா 634 இலட்சத்தாலும், 1962ம் ஆண்டில் ரூபா 626 இலட்சத்தாலும் அதிகரித்தன. இவ் அதிகரிப்புக்கள், விரிவுக்காரணிகளின் பயனுற் பணநிரம்பலில் ஏற்பட்ட பலாபலன்களை ஓரளவு தடுக்க உதவினவகையில் அவை வங்கிகளின் வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட குறைவான வீழ்ச்சியையும் ஈடுசெய்தன. தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்புகள், பெரும்பாலும் தனிப்பட்டோரினதும், வர்த்தகமல்லா நிலையங்களினதும், வர்த்தக நிலையங்களினதும் உடமைகள் அதிகரித்தமையினுல் ஏற்பட்டன. தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்களில் ஏற்பட்ட அதிகரிப்பில் எவ்வளவு தூரமான தொகை உண்மையான சேமிப்புகளின் அதிகரிப்பைக் குறிக்கின்றது என்பதை திடமாகச் சொல்லுதல் கடினமாகும். இவ்வைப்புக்களின் சுழல்வு விகிதம், கேள்விவைப்புக்களின் சுழல்வு விகிதத்திலும் பார்க்கக் கணிசமான அளவு குறைவானதாகக் காணப்பட்டபொழுதிலும், அது அண்மை வருடங்களில் அதிகரித்தது. எதுவிதத்திலும், தவணை சேமிப்பு ஆகிய வைப்புக்கள், ஒப்பியல்பிற் திரவமான நிலையிற் சேமிப்புகளை வைத்திருத்தலையே குறிக்கும்.

அண்மை வருடங்களிற் காணப்பட்ட தன்மையைப் போலவே, 1963ம் ஆண்டில், மொத்தப் பணநிரம்பலில் நாணயத்தின்பங்கு கேள்விவைப்புக்களின் பங்கிலும் பார்க்கக்கூடுதலாக அதிகரித்தது. உண்மையில் பணநிரம்பலின் மொத்த அதிகரிப்பில் 71 சதவீதமான தொகை நாணயத்தின் அதிகரிப்பாகவே காணப்பட்டது. 1963ம் ஆண்டில் மொத்தப் பணநிரம்பலில் நாணயத்தின்பங்கு முந்தைய வருடத்திற்குரிய 53.1 சதவீதத்திலிருந்து 55.0 சதவீதத்திற்கு அதிகரித்தது. கேள்விவைப்புக்களின் பங்கு 46.9 சதவீதத்திலிருந்து 45.0 சதவீதத்திற்கு வீழ்ச்சியுற்றது. 1963ம் ஆண்டு பொதுமக்களின் உடமையிலிருந்த மொத்த நாணயம் ரூபா 8284 இலட்சமாகவும், கேள்விவைப்புக்கள் ரூபா 6777 இலட்சமாகவும், மொத்தப் பணநிரம்பல் ரூபா 15060 இலட்சமாகவும் அமைந்தன. கடந்த வருடங்களைப் போலவே, உயர்ந்த இனத்தைச் சேர்ந்த ரூபா 100, ரூபா 50 ஆகிய நாணயத்தாள்களில் ஏற்பட்ட அதிகரிப்பு குறிப்பிடத்தக்கதாகக் காணப்பட்டது. இவை ரூபா 870 இலட்சத்தால் அதிகரித்து, மொத்த நாணய அதிகரிப்பில் 78.0 சதவீதமான பங்குடையதாக அமைந்தன. இவ்வதிகரிப்பு, பெரிய கொடுக்கல் வாங்கல்களுக்கும் புதைத்துவைப்பதற்கும் நாணயம் தொடர்ந்தும் உபயோகிக்கப்படுவதைப் புலப்படுத்துகின்றது.

## (4) முடிவுரை

1963ம் ஆண்டு நிதித்துறையிலும் நாணயத்துறையிலும் ஏற்பட்ட முக்கிய சம்பவங்களைப்பற்றி இதுவரை தெளிவாகக் கூறப்பட்டது. கடந்த ஆண்டுகளின் நாணயவிரிவுகளினுல் எழுந்த பிரச்சனைகள் எவ்விதம் நாட்டின் வர்த்தக மாற்று விகிதத்தைத் தாக்கிய பிரதிகூலமான வெளிநாட்டு மாற்றங்களினுல் மேலும் மோசமாக்கப்பட்டன என்பதும் கூறப்பட்டது. இவ்வருடம் காணப்பட்ட சில பிரச்சனைகள் உண்மையில் தற்காலிகமானவையாகும்.

உதாரணமாக, இவ்வாண்டின் இறுதிப்பகுதியில் ஏற்றுமதிகளிற் காணப்பட்ட வீழ்ச்சி, கொழும்புத் துறைமுகத்திலும், ஏனைய துறைமுகங்களிலும் நிகழ்ந்த வேலை நிறுத்தத்தின் பயனுல் ஏற்பட்டது. இவ்வாண்டின் கடைக் காற்பகுதியிற் சீனியின் விலையில் ஏற்பட்ட கூர்மையான அதிகரிப்பும், புயற் காற்றினுற் பாதிக்கப்பட்ட கியூபா நாட்டுக் கரும்பு உற்பத்தி, ஐரோப்பிய நாடுகளில் வீழ்ச்சியுற்ற சீனி உற்பத்தி ஆகிய தற்காலிகத்தன்மையுடைய காரணிகளின் விளைவால் ஏற்பட்டதாகும். இக்காரணிகளின் பிரதிகூலமான பலாபலன்கள் ஒப்பியல்பிற் குறுகிய காலத்திற் தீரக்கூடியனவென எதிர் பார்க்கலாம். ஆனுல், திருத்த நடவடிக்கைகள் மேலும் எடுக்கப்படாத விடத்து நிலையாகத் தொடர்ந்து நிலவத்தக்க பலாபலன்களை விளைவிக்கக் கூடிய மிக ஆழமான அமைப்புடைய ஏனைய காரணிகளும் காணப்பட்டன. அவற்றுள் மிக முக்கியமானவை, அரசாங்க வரவு செலவுத்திட்டத்திலுள்ள மேலதிகமான குறைகளும் அதன் விளைவாகத் தோன்றிய நாணயவிரிவு களுமாகும்.

பொருளாதாரத்தில் விரிவுத் தன்மைகள் தோற்றமளித்து வருவதை நாணயச்சபை பல ஆண்டுகளாக ஒவ்வொரு அறிக்கைகளிலும் எடுத்துக் கூறிற்று. முதலாவதாக, இத்தகைய விரிவின் காரணமாக வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட தொடர்ச்சியான வீழ்ச்சி, வெளிநாட்டு ஏற்ற இறக்கங்களைச் சமாளிப்பதற்குத் தேவையான பொருளாதார வலிமையைப் பலவீனப்படுத்திவிடும் என்றும், அத்தகைய ஏற்ற இறக்கங்கள் இலங்கைக்குப் புதியனவல்ல என்றும் நாணயச்சபை சுட்டிக்காட்டிற்று. இறக்குமதிகளின் மீது நேரடிக்கட்டுப்பாடுகள் அமைப்பதன் மூலம் வெளிநாட்டுச் சொத்துக் களைப் பாதுகாக்க முயலும் பொழுது நாணயவிரிவின் அளவைக் குறைப்பதற் கான நடவடிக்கைகளும் அதே சமயத்தில் கையாளப்படாதிருந்தால் விலை வாசிகளின்மீது வீக்கத்தன்மையான அமுக்கங்களும், பண்டக்குறைவுகளும், தட்டுப்பாடுகளும், பலவிதமான இறுக்கங்களும் தோன்ருமல் இருக்கமுடியாது என்றும் எடுத்துக்கூறிற்று. இவ்விதம் ஆராய்ந்தறியப்பட்ட முடிவுகளை, 1963ம் ஆண்டில் நிகழ்ந்த சம்பவங்கள் வர்த்தக மாற்றுவிகிதத்தின் பிரதிகூலமான மாற்றங்களினுல் உந்தப்பட்ட வகையில், உண்மையாக நிரூபித்திருக்கின்றன. ஏனைய நாடுகளிற் சிலசமயம் ஏற்பட்டதாக அறிந் துள்ள மோசமான வீக்கத்தன்மைகள் போல் 1963ம் ஆண்டில் இலங்கையில் எதுவும் ஏற்பட்டதென்பதல்ல. ஆனுல், 1963ம் ஆண்டிற்தான் இலங்கையின் முற்கால அனுபவங்களிற் காணப்பட்ட நிலைவரமான விலைவாசிகள் அண்மை வருடங்களிலும் பார்க்கக் கூடிய தீட்சணமாக வேறுபட்டுக்காணப்பட்டன. அன்றியும் இவ்வருடத்திற்தான் தொடர்ச்சியான நாணய விரிவுகளின் பிரதி பலன்கள் முந்தைய வருடங்களிலும் பார்க்க மிகத்துலக்கமாக அறியக் கூடியதாகத் தோன்றத் தொடங்கின.

ஆயினும், இலங்கையின் பிரச்சனைகள் சீர்திருத்தமுடியாதவைகளல்ல. நாணயத்துறையிற் பிரதிகூலமான சம்பவங்களும், பொருளாதார வளர்ச்சி ஒப்பியல்பிற் குறைவான விகிதாச்சாரமானதாகவும், வெளிநாட்டுச் சொத்துக்கள் பலவீனமுடையதாகவும், காணப்படுகின்றபோதிலும் வருங் கால வளர்ச்சிக்கு இலங்கையின் பொருளாதாரத்திற் கணிசமான வாய்ப் புக்கள் உள. இலங்கையில் உள்ள வாழ்க்கைத் தரங்களோ, தனியாளுக்கான வருமானங்களோ, ஏனைய அபிவிருத்தி பெறும் நாடுகளிலும் பார்க்க உயர்ந் தனவாகும். கணிசமான அளவுடைய அந்நிய செலாவணி வருமானங்களை ஏற்று மதித்துறையினூடாக இலங்கை பெற்றுவருகின்றது. தேசிய வருமானத் தில் ஏற்றுமதி வருமானங்களின் பங்கு ஒப்பியல்பில் உயர்ந்ததாக அமைந்துள்ள தென்பதோடு, அத்துறை அடுத்தடுத்து விரிந்து செல்லத்தக்க வலிமையும்—

குறிப்பாக தேயிலையின் சந்தர்ப்பத்தில்—அண்மை வருடங்களிற் காணப் பட்டது. இலங்கையின் உள்நாட்டுக் கமத்தொழிலின் உற்பத்திவலிமை யிலும் மெச்சத்தக்க அதிகரிப்புகள் ஏற்பட்டிருக்கின்றன. இத்துறை மேலும் அபிவிருத்தியடையக் கூடிய வாய்ப்புக்கள் ஏராளமாக உண்டு. கைத்தொழில் அபிவிருத்திச் செயல்களிலும் ஒரு குறிப்பிடத்தக்க முயற்சி ஆரம்பமா யிருப்பது மிகத் தெளிவான விடயமாகும். இது செயலுற மேலும் முனையப் படின், இலங்கைப் பொருளாதாரத்தின் அடிப்படை அமைப்பை மாற்றி அமைத்த சின்னமாக விளங்கும். இவைகளும் இவைபோன்ற ஏனைய வாய்ப்புக் களும் துரிதமான வளர்ச்சியைத் தரத்தக்கன. ஆனால் இவற்றைப் பூரண மாக உபயோகிப்பதற்கு நாணயத் துறையிலுள்ள மேலதிகமான சமமற்ற தன்மைகள் இடையூறாக அமையத்தக்கன என்பது மட்டுமன்றி, இச்சமமற்ற தன்மைகள் அதிககாலம் தொடர்ந்து நிலவவிடப்பட்டால் அவை மிகவலுப் பெற்று, உற்பத்திச் செயல்முறைகளைத்தன்னும் தடை செய்யத்தக்க தன்மைகளைத் தோற்றுவிக்கும்.

நாணயத்துறையிலும், நிதித்துறையிலும் இலங்கையைத் தற்போது நோக்கி நிற்கும் மறுவழிகள் உடனடியாகத் தெரிகின்றன. முற்காலங்களில் ஒன்று சேர்க்கப்பட்ட வெளிநாட்டுச் சொத்துக்களில் ஏற்பட்ட வீழ்ச்சி, இலங்கை இனிமேல் தன் வருவாய்க்கு மேலான சீவியம் நடாத்துதல், வெளி நாடுகளிலிருந்து கடன்பட்டாலன்றி, முடியாது என்பதைப் புலப்படுத்து கின்றது. இதன் உட்கருத்து யாதெனில், இலங்கை தன் நுகர்ச்சிக்காகவோ முதலீட்டத்திற்காகவோ வருடாவருடம் உபயோகிக்கும் மொத்தப் பொருள்வளங்களின் அளவை, உள்நாட்டு உபயோகத்திற்கான உற்பத்தி யிலிருந்து கிடைக்கக்கூடிய அளவிற்கும், தனது ஏற்றுமதிகளைப் பரிமாறு வதனால் அல்லது வெளிநாட்டுக் கடன்பாடுகளினாற் கொள்வனவு செய்யக் கூடிய இறக்குமதிகளின் அளவிற்கும், மேற்படாமற் குறைக்கவேண்டும் என்ப தேயாகும். வெளிநாட்டுச் சொத்துக்களை மேலும் குறைக்கக்கூடிய வலிமை இல்லாத சந்தர்ப்பத்தில், மேற்கூறியவாறு சமன்செய்தல், மேலதிகமான உள்நாட்டு நாணய விரிவு இருந்தால் என்ன இல்லாவிட்டால் என்ன, ஏற் பட்டே தீரவேண்டும். இவ்விதம் சமன் செய்வதற்கு இலங்கை கையாளக் கூடியவழிகள் இரண்டு உள. ஒன்று, நாணயவிரிவு தடுக்கப்படாது தொடர்ந்து கொண்டிருக்கும் போதிலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகளை விதிப்பத னூடாக—அதாவது தொடர்ச்சியாக விலை அதிகரிப்புகளேற்படும் வீக்கத்தன் மைகளை விளைவிப்பதனூடாக—சமன் செய்யலாம்; அல்லது நாணய விரிவைப் படிப்படியாகக் கணக்கான முறைப்படி, முக்கியமாக நிதித்துறையில் நட வடிக்கைகள் எடுப்பதன் மூலமாகக் கட்டுப்பாடு செய்து, விலைமட்டங்களின் மீதுள்ள அமுக்கங்களையும் அபிவிருத்தி பெறும் பொருளாதாரத்தின் தேவை களுக்கொப்ப ஆகக்குறைந்த அளவுக்கு மேற்படாமல் அமையச் செய் வதனாலும், சமன் செய்யலாம்.

இறக்குமதிகளின் அளவு குறைக்கப்பட்டமையால் எப்படியும் குறைவுற வேண்டிய உண்மைப் பொருள்வளங்களின் பாவிப்பில் ஏற்படும் குறையைச் சமூகத்தின் பல்வேறு பகுதிகளிலும் விநியோகிக்கத்தக்க தன்மையுடையன வாக வீக்கமான விலை அதிகரிப்புகள் அமைகின்றன என்பது உணரத்தக்கது. விலைவாசிகள் அதிகரிக்கும் பொழுது, எவர்களுடைய பணவருமானங்கள் நிலையானவையாக அல்லது விலைவாசிகளின் அதிகரிப்புகளுக்குத் தக்கவாறு அதிகரிக்காமல் இருக்கின்றனவோ, அவர்கள் முன்பிலும் பார்க்கக் குறைந்த அளவுடைய பொருட்களையே கொள்வனவு செய்ய முடிகின்றது என்பதுடன் அவர்களின் உண்மை வருமானங்களும், நுகர்ச்சியும் சுருங்கவேண்டிய கஷ்ட மும் ஏற்படுகின்றது. ஆனால் மறுபுறத்தில், எவர்களுடைய பணவருமானங்கள்

விலைவாசிகளின் அதிகரிப்பிலும் பார்க்கத் துரிதமாக அதிகரிக்கின்றனவோ அவர்களின் உண்மை வருமானங்களும் சீர்திருத்தம் பெற்று அவர்கள் நன்மை அடைகின்றூர்கள். தெளிவாகக் கூறின், வீக்கத்தன்மைகளோ அல்லது விலை அதிகரிப்புகளோ ஏற்படுமிடத்து, உண்மை வருமானங்களின் விநியோகம், ஒப்பியல்பில் நிலையான பணவருமானமுடைய வர்த்தகத்திற்கு, எதிராகவும், தட்டுப்பாடுகளினுற் தோன்றிய அதிகரித்த இலாபங்களினுலும் ஏனைய காரணிகளினுலும் அதிகரிப்படைந்த பணவருமானமுடைய வர்த்தகத்திற்குச் சாதகமாகவும், சென்றடையும். முக்கியமாக, அதிர்ஷ்டத்தை எதிர்நோக்கும் தொழிற்பாடுகளே இந்நிலைமைகளினுல் நன்மை பெறுகின்றன. உண்மை வருமானங்களில் இவ்வாருகத் தோன்றிக் காணப்படும் நிலைப்பெயர்ச்சிகளி னூடாகவேதான், உண்மைப் பொருள்வளங்களின் அளவில் ஏற்பட்டகுறை, சமூகத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் வீக்கத்தன்மை ஏற்படும் பொழுது விநியோகிக்கப்பட நேரிடுகின்றது.

வீக்கத்தன்மையின் போது விலை அதிகரிப்புகளின் படுகை சமூகத்தின் பல்வேறு பிரிவுகளிலும் வேறுபட்டு அமையுமென்பதைவிட, வீக்கத்தன்மை யிலுள்ள ஒரு முக்கிய குறைபாடு யாதெனில், அது வலுப்பெற்று விரைவாக மேலோங்கிச் செல்லும் தன்மையுடையதாகவும், அதைக் கட்டுப்படுத்திக் கொள்ளுதல் மேலும் கடினமானதாகவும், உள்ளமையே. வீக்கத்தன்மை யினுல் உண்டாக்கப்பட்ட விலை அதிகரிப்புகள், உயர்ந்த மட்டத்தில் மாறு பாடின்றித் தங்கி நிற்கத் தக்கவையல்ல. உதாரணமாகக் கூலிகள் சம்பளங்கள் பெறுவோர் தம் பணவருமானங்களை அதிகரித்துக்கொள்வதற்கு நெருக்கடி களை உண்டுபண்ணக்கூடும். இவ் அதிகரிப்புகள் வழங்கப்பட்டால் அவை தமக்குத் தாமே தோல்வியிழைக்கும். கூலி அதிகரிப்புகள் தற்காலிகமான நன்மையை விளைவிக்கக்கூடுமாயினும், அவை ஆக்கச் செலவுகளில் அதிகரிப் புகளை விளைவித்து, விலைவாசிகளையும் வாழ்க்கைச் செலவுகளையும் மேலும் அதிகரிக்கச்செய்வதால், அவை அதிகரித்த விலைவடிவத்திலும் வாழ்க்கைச் செலவுவடிவத்திலும், கூலிகள் சம்பளங்கள் உழைப்பவர்களும் உட்பட்ட நுகர்ச்சிகளையே சென்றடைகின்றன. இவ்விதமாக, ஒரு கால எல்லைக்குள், விலைகளும், கூலிகளும், ஆக்கச் செலவுகளும் ஒன்றின்மேலொன் ருக ஒன்றுகூடி அதிகரிக்கும் போக்கு ஏற்படமுடியும்.

இலங்கை ஒரு ''மூடப்பட்ட'' பொருளாதாரமாக அல்லது வெளி நாடுகளுடன் ஒப்பியல்பிற் குறைந்த அளவுடைய வர்த்தகத் தொடர்புடைய தாக இருந்தால், வீக்கத் தன்மைகளினுல் ஏற்படும் பிரதிபலன்கள், பெரும் பாலும் உண்மை வருமானங்கள் விநியோகிக்கப்படுவதை மேற்கூறியவாறு பெயர்ச்சியடையச் செய்வதோடு மட்டும் நின்றுவிடும் எனவும், மொத்த உற்பத்தியின்மேல் ஒப்பியல்பில் எவ்வித பிரதிபலன்களையும் விளைவிக்காது எனவும்—உற்பத்தித் தொழிற்பாடுகள் ஒருவிதத்திலும் பழுதடையாமல் முற்ருக இருத்தல் அரிதாயினும்—கூறமுடியும். ஆனுல் ஒரு ''திறந்த'' பொருளாதாரத்தில் ஆக்கச் செலவுகள் வீக்கமுடையனவாக அதிகரித்தல் உற்பத்தியையே பழுதடையச்செய்யமுடியும். இதற்குள்ள காரணம், ஏற்று மதிப் பொருட்களுக்கான விலைகள் வெளிநாட்டுச் சந்தைகளில் நியமிக்கப் படுவதால் ஏற்றுமதித்துறையின் ஆக்கச் செலவுகளிலேற்படும் அதிகரிப்புகளை உயர்ந்த விலை வடிவத்தில் நுகர்வோர்மீது சுமத்துதல் இயலாது என்பதே யாகும். ஏற்றுமதி விலைகள் மாற்றமின்றி இருக்கையில், ஆக்கச் செலவுகளில் அதிகரிப்பு ஏற்படுமிடத்து எல்லை உற்பத்தியாளரின் போட்டி வலு வீழ்ச்சி யடையநேரிடுவதால் ஏற்றுமதி உற்பத்தியும் உண்மையிற் குறைவடைய நேரி டும். இவ்விதமான பலாபலன்கள், சென்மதி நிலுவை நிலையை மேலும் சீர் கேடடையச் செய்து இறக்குமதிகளை மேலும் குறைக்க வேண்டிய தேவையை

உண்டுபண்ணுவதால், வீக்கத்தன்மையை மேலும் பலமடையவே செய்யத் தக்கன. அன்றியும், இதனுல் ஏற்றுமதித்தீர்வைகள், வருமானவரி, ஆதாய வரி, ஆகியனவற்றிலிருந்து கிடைக்கும் அரசிறை வீழ்ச்சியடையநேரிட்டு, வரவு செலவுத்திட்டத்திலுள்ள மொத்தக்குறையின் பிரமாண்டம் விரிவடைய நேரிடுவதால், அரசாங்க வரவு செலவுத்திட்டத்தின்மீதும் இது கூடுத லான அமுக்கங்களை விளைவிக்கும்.

விலைவாசிகளைத் தொடர்ச்சியாக அதிகரிக்கச் செய்யத்தக்க ஏனைய காரணிகளும் உள. பொருட்களிற் குறைவுகள் தட்டுப்பாடுகள் காணப்படும் பொழுதும், விலைவாசிகளில் இன்னும் கூடிய அதிகரிப்புகள் எதிர்பார்க்கப் படும் பொழுதும், பொருட்களின் கையிருப்புகள் அதிட்டமான இலாபத்தை எதிர்பார்த்தவகையில், மேலதிகமாகக் குவித்து மறைத்து வைக்கப்படும் நிலைமை தூண்டப்படுவதால் விலைவாசிகளிற் சாதாரணமாக ஏற்படத்தக்க அதிகரிப்புகளிலும் பார்க்கக் கூடுதலான அதிகரிப்புகள் ஏற்பட நேரிடும். வீக்கத்தன்மையான விலைவாசிகளினுற் தோற்றுவிக்கப்படும் புதுவிதமான நோக்கங்கள் தான், உண்மையில், வீக்கத்தன்மையிலுள்ள நாசம் விளைவிக்கத் தக்க அம்சம் என்பது குறிப்பிடத்தக்கது. அது தொடங்குமாயில் அதைக் கட்டுப்படுத்தும் கொள்கை கடினமாகும். விலைவாசிகள் மேலும் அதிகரிக்கு மென எதிர்பார்க்கப்படும் நிலைமை தோன்றுமாயின், நிரம்பல்களில் ஏற்படும் அதிகரிப்புகளும் அதிட்டமான இலாபத்தை எதிர்பார்க்கும் கையிருப்புக் குவியல்களிற் சென்று மறைந்துவிடும். மேலதிகமான கேள்விகள் நிலவுகின்ற ஒரு பொதுச் சந்தர்ப்பத்தில், விலைக்கட்டுப்பாடுகளும் விநியோகக் கொள்கை களும் பலிதமடைவதற்கெதிராகப் பல தடைகள் உள்ளன என்பது உணரத் தக்கது. விலைக்கட்டுப்பாடுகள்தாமும் எண்ணிக்கையிற் பெருகத்தக்கன என்பதுமட்டுமன்றி, நிரம்பல்களையும் விநியோகத்தையும் கட்டுப்படுத்தி இயக்குவதற்குத் தேவையான உறுப்புகளை மேலும் மேலும் அதிகரித்தமைக்க வேண்டிய தேவைகளும் ஏற்படத்தக்கன. விலைக்கட்டுப்பாடுகளுடன் பங்கீட்டு அளவுகள் சம்பந்தமான கட்டுப்பாடுகளும் அமைக்கப்படாவிடின் எப்பொழு தும் கட்டுப்பாடுகள் மீறப்பட்டோ அல்லது நிரம்பல்கள் சந்தைகளிலிருந்து மறைந்தோ காணப்படும். கட்டுப்படுத்தப்பட்ட விலைகளோடிசைந்த கேள்வி களிலும் பார்க்கக் கிடைக்கக்கூடிய நிரம்பல்கள் குறைவாக இருப்பின் தட்டுப்பாடுகள் ஏற்பட்டே தீரும். ஆயினும் விரிவான ஒரு பங்கீட்டு முறை யை அமைத்தல், நிர்வாகத்தின்மீது பெரிய இளைப்பை விளைவிக்கும். அத் தகைய சுமையை ஒரு அபிவிருத்தி பெறும்நாடு தாங்குவது கஷ்டமானது. அல்லாமலும் விலைக்கட்டுப்பாடுகள், பங்கீட்டுக் கட்டுப்பாடுகள் ஆகியன வற்றினுற் தோன்றும் நிர்வாகச் செலவுகள், சாதாரணமான விநியோகச் செலவுகளுடன் சேரவேண்டிய பிறிதோர் கூறுன செலவுகளாகும் என்பதும், அவற்றை வரவு செலவுத்திட்டத்திலிருந்து அறவிட நேரிடுகின்றது என்பதும் உணரத்தக்கது.

ஆயினும், மேற்கூறிய விதமான சம்பவங்கள் நிகழ்வதை இலங்கை தடுப்பதற்கோ அல்லது குறைப்பதற்கோ உதவிபுரியக்கூடிய வேறு வழிகளும் உள. இதன்பிரகாரம், பொருளாதாரத்திலுள்ள நாணயக் கேள்விகளின் மொத்தத் தொகை பொருளாதாரத்திற் கிடைக்கக்கூடிய உண்மைப் பொருள்வளங்களோடு கூடியவரை இசைவுற்றதாக அமையும் வண்ணம் நாணய விரிவையே குறைக்கவேண்டும். இவ்வாறு குறைத்தல் வீக்கத்தன்மை களைக் கட்டுப்படுத்தி அமைக்கும் பலனைத் தரும். ஆயினும் இவ்விதம் செய்யு மிடத்து, ஒப்பியல்பில் நிலைவரமான விலைவாசிகளை அடைவதோடு மட்டும் நின்றுவிடக்கூடாது. பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்குத் தேவையான அமைப்புகளைக் கொடுக்கக்கூடியதாகவும் தொடர்புற்றமைய

வேண்டும். அபிவிருத்தியடைகின்ற ஒரு பொருளாதாரத்தின் சந்தர்ப்பத்தில், உதாரணமாக வருடா வருடம் ஏற்படுகின்ற உற்பத்தி அதிகரிப்புகளுக்கு இசைந்த முறையில், ஒரு குறித்த அளவுள்ள நாணயவிரிவு செய்வதற்கு எப்பொழுதும் வாய்ப்புக்கள் காணப்படும். மென்மையாகவும் தரமாகவும் அதிகரித்துச் செல்கின்ற விலைவாசிகள் முதலீட்டத்திற்கும் உற்பத்தித் தொழிற்பாடுகளுக்கும் ஒரு தூண்டுகோலாக அமைந்து விளங்கவும் கூடும். ஆனல் இங்கு பரிசீலனைக்கு எடுத்துக் கொண்ட விடயம் மென்மையாக அதிகரித்துச் செல்லும் விலைவாசிகளிலும் பார்க்க ஒரு நிலையான விலைவாசி களே விரும்பத்தக்கன என்பதல்ல. அது எதைப் பற்றியதெனின், கட்டுப் படுத்திக்கொள்வதற்கு மேலும் மேலும் கஷ்டமானதாக அமையத்தக்க வீக்கத்தன்மையான போக்கா அல்லது ஒப்பியல்பில் நிலைவரமானவையாக (முற்ருக ஒரு நிலையானதாக இல்லாவிட்டாலும்) அமைக்கப்பட்ட விலை மட்டங்களா சிறப்பானவை என்பது பற்றியேயாகும்.

இலங்கையின் சந்தர்ப்பத்தில் மிகமேம்பட்ட தேவையாக இருப்பது, சனத்தொகையின் அதிகரிப்புவிகிதத்திலும் பார்க்கக் கூடுதலான விகிதாச் சாரமான முறையில் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்கச் செய்ய வேண்டும் என்பதும், எண்ணிக்கையில் அதிகரித்துக்கொண்டு செல்லும் தொழிலாளர்களுக்கு தொழில்நிலை வசதிகள் கிடைக்கச்செய்யவேண்டும் என்பதுமாகும். இக்குறிக்கோளை அடைவதற்குப் பொருளாதாரத்திலுள்ள முதலீட்டங்களை குறிப்பிடத்தக்க விகிதாச்சாரமுடையவையாக அதிகரிக் கச்செய்து, அவற்றின்பொருட்டு நாட்டிலுள்ள நிதியாதாரங்களும் திரட்டப் படல்வேண்டும். நிதியீட்டத்தேவைகளுக்கு வெளிநாடுகளிலிருந்து கிடைக் கத்தக்க நிதிகளின் அளவு அறியப்படுமாயின், உள்நாட்டிலுள்ள நிதியாதாரங் கள் முற்ருகத் திரட்டப்படுதல் தேவையாகின்றது. 1962ம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கையிற் கூறப்பட்டவாறு, அபிவிருத்தியடைகின்ற ஏனைய நாடுகளிலும் பார்க்க இலங்கை கணிசமான அளவுடைய நிதியாதாரங்களை அரசிறைக்குள் வழிப்படுத்திக் கொள்வதிற் கூடிய வெற்றியடைந்துள்ளது. இலங்கையின் தேசிய உற்பத்தியில் அரசிறை வகிக்கும் பங்கு—ஏறக்குறைய 26 சதவீதமாக அமைந்து—ஏனைய அபிவிருத்திபெறும் நாடுகளிலுள்ளதிலும் பார்க்கக் கூடுதலாக விளங்குகின்றது. ஆயினும் அரசாங்கத்தின் நிதியாதாரங் களிற் பெரும்பகுதியானவற்றை நடைமுறைச் செலவுகள் உட்கொள்ளு கின்றமையால், முதலீட்டத்திற்கென உபயோகிக்கக்கூடிய பொருள் வளங்களின் அளவும் குறைவடைகின்றது. இதே சமயத்தில், முன்னர் விரித்துக் கூறப்பட்டவாறு, அதிகரித்த முறையில் முதலீட்டம் செய்வதற்கு விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டங்களிலிருந்து சாதுரியமாகப் பெறக்கூடிய நிதியாதாரங்களின் தொகைகளிலும் எல்லைகள் உள.

உள்நாட்டு நிதியாதாரங்களைத் திரட்டுவதற்குக் கையாளவேண்டிய கொள்கைகள், ஒரு துரிதமான பொருளாதார வளர்ச்சிக்குத் தேவையான முதலீட்ட அளவுகள் குறிக்கப்பட்டுள்ள ஒரு அபிவிருத்தித்திட்டத்தின் தோரணையில், நேரடியாகத் தோற்றத்தக்கன. அந்நிய நிதிகளின் அளவு களும், அனுசரிக்கத்தக்க நாணய விரிவின் அளவுகளும் அறியப்படுமாயின், அரசிறை, அரசாங்க நடைமுறைச்செலவுகள் ஆகியவை சம்பந்தமான குறிகோள்களை மிக இலகுவாக நியமிக்கமுடியும். இத்தகைய ஒரு அமைப்பு முறையின் நியதிப்படி, உதாரணமாக மான்னியச் செலவீடுகளின் உவப் பான அளவு எத்தகையது என்பது போன்ற விடயங்களைப் பரிசீலனை செய்ய லாம். இது சம்பந்தமாக, மான்னியங்களுக்கும், வரவு செலவுத்திட்டக் குறைகளுக்கும், விலைமட்டங்களுக்கும் இடையில் உள்ள தொடர்பு அண்மை வருடங்களிற் கணிசமாக வேறுபட்டுள்ளது என்பதும் கவனிக்கத்தக்கது.

வெளிநாட்டுச் சொத்துக்கள் ஏராளமாகவும், இறக்குமதிகள் இலகுவாகவும் வந்துகொண்டு இருந்த காலங்களில், அரசாங்க வரவுசெலவுத்திட்டங்களின் விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டங்கள், மான்னியங்களை வைத்திருக்கவோ வேறு காரணங்களுக்காகவோ ஏற்பட்ட போதும், அவ்விரிவுகள் நுகர்வோர் விலைகளின் மீதோ வாழ்க்கைச் செலவுகளின் மீதோ எவ்வித பிரதிபலன் களையும் விளைவிக்கவில்லை. இதன் விளக்கம் யாதெனில், மான்னியச் செலவு கள், நுகர்வோர்களால் ஏனைய விலை அதிகரிப்புகளினூடாகச் சுமக்கப் பட்டவையல்ல; ஆனல் வெளிநாட்டுச் சொத்துக்களின் வீழ்ச்சியினுல் சுமக் கப்பட்டவை என்பதே ஆகும். ஆனுல் மறுபுறத்தில், தற்போதைய சந்தர்ப் பத்தில், மான்னியம் வழங்கப்படும் பொருட்களின் விலைகள் குறை வாகவே இருந்துவருகின்றனவெனினும், மேலதிகமான விரிவு விளைவிக்கத்தக்க நிதியீட்டங்களின் பயனுல், ஏனைய நுகர்வோர் விலைகளும் பலவித பொருட் களின் தட்டுப்பாடுகளும் தொடர்ச்சியாக அதிகரிக்க நேரிட்டுள்ளன. ஒரு அபிவிருத்தித் திட்டம், பொருள்வளங்களை நுகர்ச்சிக்கும் முதலீட்டத் திற்குமிடையில் உகந்த முறைப்படி அமைத்து குறிப்பான நியதிகளில் எடுத்துக்காட்டும் என்பது மட்டுமன்றி, அரசிறையை மேலும் அதிகரித்துக் கொள்ளக்கூடிய வாய்ப்புக்களையும் தெரிவிக்கும். முந்தைய வருடாந்த அறிக் கைகளில் ஆழுத்திக்கூறப்பட்டவாறு, அபிவிருத்தி ஏற்படும் பொழுது வரு மானங்களில் ஏற்படும் அதிகரிப்புகளில் ஒருபகுதியை, முக்கியமாக வரி இல்லாவேளைகளில் நுகர்ச்சியை நாடிச்செல்லத்தக்க அவ் அதிகரிப்புகளில் ஒரு பகுதியை, அரசிறைக்குள் வழிப்படுத்திக்கொள்வதற்கு உகந்த முறையில், ஒரு அபிவிருத்திபெறும் நாட்டிலுள்ள வரிமுறைகள் படிப்படியாக இசைவாக்கப்படவேண்டும். அன்றியும், ஒப்பியல்பான தட்டுப்பாடுகள் நிலவும் சந்தர்ப்பத்தில், உயர்ந்த இறக்குமதித்தீர்வைகள், விற்பனவு அல்லது மொத்தச் சுழல்வு வரிகள், மதுவரிகள் ஆகியன அரசிறையை அதிகரிப்பதற்கும் தட்டுப்பாடுகளினுற் தோன்றும் மேலதிக இலாபங்களைக் குறைப்பதற்கும் பயனுறத்தக்க கருவிகளாகும்.

முற்றுக ஆராயுமிடத்து, பொருளாதார வளர்ச்சிப்போக்கைத் துரிதப் படுத்திக்கொள்ளுதல்தான் இலங்கையின் அடிப்படையான பிரச்சனைகளைத் தீர்ப்பதற்குவல்ல ஒரேயொரு உபாயமாகும். ஆனல் நாணயவிரிவு மேலதிக மானதாகவும், வீக்கத்தன்மையான அமுக்கங்கள் கடூரமானவையாகவும் காணப்படும் சந்தர்ப்பத்தில், மேற்கூறியவாறு துரிதப்படுத்துதல் கடின மானதாக அமையத்தக்கது என்பதனுலேயே பொருளாதாரத்தின் நிதித் துறையிலும் நாணயத்துறையிலும் உள்ள சமமற்ற தன்மைகள் குறைக்கப்பட வேண்டியது அவசியமாகின்றது.